வார்ப்பு, பிளாஸ்ரிக், அலுமினியம், எனமல் ஷெரமிக் பாஸ்வி குட்ஸ் பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

ராஜா ரேட் சென்ரர்
3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

★ வாளிகள்
★ கிடாரங்கள்
★ சட்டிகள்
★ கூடைகள்,
★ பாக்ஸ்,
★ பாத்திரவகைகளையும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

RAJAH Trade Centre
3 Stanley Road, JAFFNA.

சுடர்: 4 சுக்கில ஞு வைகாசி மீ 04 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 11 (17 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-137

# அமைதிப் படை செயற்படும் விதம் குறித்து புலிகள் பிரஸ்தாபம்

## நேற்று நடந்த பேச்சுக்களில்

கொழும்பு, மே 17

**வடக்கு - கிழக்கு மாகாணத்தில், இந்திய அமைதிப் படையினர் செயற்படும் விதம் குறித்து, நேற்று நடந்த பேச்சுக்களின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் பிரஸ்தாபித்தனர்.**

இலங்கை அரசாங்க அமைச்சர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நேற்று மீண்டும் நடைபெற்றன.

அப்போது இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் கண்டித்தனர்.

இந்திய அரசுப் பிரதிநிதி ஒருவர் பத்திரிகைகளுக்கு அளித்ததாகக் கூறப்படும் பேட்டி பற்றியும் தேசியப் பத்திரிகைகளில் நேற்று அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது பற்றியும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் நேற்றைய பேச்சுக்களின்போது பிரஸ்தாபித்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள உண்மையான நிலையை முற்றிலும் திரித்துக் கூறுவதாக இப்பேட்டி அமைந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்திய இராணுவத்தினர் அமைதிகாக்கும் படையாகச் செயற்படவில்லை என்பதை விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வலியுறுத்திக் கூறினர்.

இன்று இந்திய அமைதி காக்கும் படை ஒரு பிரதேசத்தை முற்றுகையிட்டுள்ள இராணுவமாகவே செயற்பட்டு வருகிறது-

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு சொல்லொணா கஷ்டங்களையும் துயரங்களையும் அது ஏற்படுத்தி வருகிறது-

வன்செயல்கள் அதிகரிப்பதற்கும், பிணக்குகள் மோசமடைவதற்கும் அவை காரணமாக உள்ளன-

இந்திய அமைதிப் படை இங்கு வந்தது தொடக்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்தனர். இந்த இரு மாகாணங்களிலும் வழமையான அலுவல்கள் சீர்குலைந்துள்ளன- என்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்கோ, எதிர்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவ

(8-ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டம் நடந்த வேளை மரணம்!

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நேற்றுப் பிற்பகல் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர், கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, திடீரென மயக்கமுற்று அங்கேயே மரணமானார்.

இவ்வாறு மரணமானவர், வட இலங்கை சங்கீத சபை

(8ஆம் பக்கம் பார்க்க)

### 2 ஆவது நாளாக பாடசாலைகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், மே 17

யாழ். குடாநாட்டில் இரண்டாவது நாளாக நேற்றும் பாடசாலைகள் இயங்கவில்லை.

பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக இருந்தது. சில பாடசாலைகளில் சமுகமளித்த குறைந்த அளவான மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்பட்டது. (ஓ-3-10)

### கனகநாயகம் காலமானர்

யாழ்ப்பாணம், மே17

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் கடந்த 15-ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் காலமானர்.

வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த இவருக்கு இறக்கும்போது 84 வயது. இவரது ஈமக்கிரியைகள் 18-ஆம்

(8-ஆம் பக்கம் பார்க்க)

### தென் இலங்கையில் 12 பேர் கொலை

கொழும்பு, மே 17

நேற்று மட்டும் தென் இலங்கையில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்களில் நான்கு பேர் ஐ. தே. க. ஆதரவாளர்கள். ஒருவர் மாகாணசபைத்தேர்தலில் ஐ. தே. க. சார்பில் போட்டியிட்டுத் தோல்வி கண்ட வேட்பாளர். (இ)

**சுபநேரம்**
17—05—1989
வைகாசி— 04
புதன்கிழமை

சுபநேரம்:
04. 23 முதல் 05. 53 வரை
ராகுகாலம்:
11. 53 முதல் 01.23 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### ஓய்வூதியம் மேலும் தாமதமாகும்

யாழ்ப்பாணம், மே 17

யாழ். செயலகத்தில் ஓய்வூதியக் கிளை இயங்கிய போதும் கொழும்பில் இருந்து வவுச்சர்கள் வந்து சேராததால் ஓய்வூதியம் மேலும் தாமதமாகும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் அடுத்த வாரமே பென்ஷன் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-3)

### கிளிநொச்சி, பரந்தன் அடகு நகைகள் வந்தன

யாழ்ப்பாணம், மே 17

கிளிநொச்சி பரந்தன் பகுதி மக்களின் அடகு நகைகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டன.

இவை சில தினங்களில் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்படும் என்றும், அடுத்தவாரம் அளவில் இவை உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

முதற்கட்டமாக 700பேரின் நகைகள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் அடகுநகைகள் பெறவிருப்போரின் விவரங்கள் தனித்தனியாக அறிவிக்கப்படுமென்றும் அதே வட்டாரங்கள் மேலும் தகவல் தந்தன.

கிளிநொச்சி தபாலக கட்டடத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில வைத்தே நகைகள் விநியோகிக்கப்படும். (ஓ-10)

### முச்சந்தி முரளி



அப்ப என்ன உது ரோகண விஷயம்? முந்தி ஒரு இளம் சட்டத்தரணி லலித்தை ஏய்க் காட்டினர். இந்த முறை சுக் காட்டினது யாரோ......?

### வேலைநிறுத்தம்

கொழும்பு, மே 17

அக்கரப்பத்தனை டயகம தோட்ட கிழக்குப் பிரிவில் இலங்கை இராணுவம் முகாமிட்டிருப்பதை ஆட்சேபித்து அப்பகுதியைச் சேர்ந்த 20 ஆயிரம் தொழிலாளர்கள் நேற்றுமுதல் வேலைநிறுத்தத்தில் இறங்கினர். (ஒ-எ)

### ஜவானின் துப்பாக்கி வெடித்து சங்கானை தபாலதிபர் பலி!

யாழ்ப்பாணம், மே 17

-பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸுக்குள் இந்தியப் படையைச் சேர்ந்த ஒருவரின் துப்பாக்கி வெடித்ததினுல் பஸ்ஸில் பயணம் செய்த சங்கானை தபால் அதிபர் மரணமானர்.

ஏனைய இரண்டு பயணிகளும் இச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

சம்பவத்தில் மரணமானவர் முருகுப்பிள்ளை கார்த்திகேசு (வயது 50).

சங்கானை தபாலதிபரான இவர் பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்தவர். நான்கு பிள்ளைகளின் தந்தை.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நேற்றுக்காலை பஸ் பருத்தித்துறையில் இருந்து வந்து கொண்டிருந்தது. ஆவரங்காலில் படையினரால் அந்த பஸ் மறிக்கப்பட்டது. கைகள் கட்டிய நிலையில் இளைஞர்கள் சிலர் பஸ்ஸில் ஏற்றப்பட்டனர்.

பஸ் ஓடிக்கொண்டிருந்த போது, துப்பாக்கி ஒன்று

(8-ஆம் பக்கம் பார்க்க)

**பி. பி. சி. செய்திக்கு மறுப்பு:**

### ரோகண விஜேவீர நலமாக இருக்கிறாராம்

#### ஜே. வி. பி. அறிக்கை

மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. ரோஹண விஜேவீர நலமாக இருக்கிறார்.

முன்னணியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்கா கையெழுத்திட்டு வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ரோஹண விஜேவீர சுகயீனமடைந்துள்ளார் என்றும் அவருக்கு வைத்திய சிகிச்சை அளிக்க அரசாங்கத்தின் உதவி நாடப்பட்டிருப்பதாகவும் வெளியான பி. பி. சி. செய்தியை முன்னணி நிராகரித்துள்ளது.

அதன் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ரோஹண விஜேவீர நல்ல சுகமாக இருக்கிறார். அவர் வைத்தியசிகிச்சை பெறவேண்டிய அவசியம் எழவில்லை. கட்சிக்காகவும் தேச நலனுக்காகவும் தொடர்ந்தும் அவர் தன்னை அர்ப்பணித்துக்கொள்வார்.

அப்படி அவருக்கு வைத்திய சிகிச்சை பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அரசாங்கத்தின் உதவியை நாடுவ

(8-ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரணம், வீடமைப்புக்கு 90 கோடியே 77 லட்சம் ரூபா

## மாகாணசபை இதுவரை வழங்கியது

திருகோணமலை, மே 17

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும், ஒருங்கிணைந்த நிவாரணத் திட்டத்திற்கும், சுயவிடமைப்பு நிவாரணத்திற்குமென, இதுவரை மாகாணசபையினுல் மொத்தம் 90கோடி 77 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை வடக்கு-கிழக்கு மாகாணசபையின் புனர்வாழ்வு, காணி விவசாய அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம் தெரிவித்தார் என்று சபையின் தகவற் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுயவிடமைப்பு மானிய உதவியாக 33 கோடி 70லட்சம் ரூபாவும், ஒருங்கிணைந்த நிவாரணத் திட்டத்தின்கீழ் உணவுமானியம், மீள்குடியேற்றம், உற்பத்தித் திறன்மிக்க சுயதொழில் நிவாரணம் உயிரிழந்தவர்களுக்கான நஷ்டஈடு போன்றவற்றிற்காக (570,75 மில்லியன்) 57 கோடியே 7 லட்சம் ரூபாவும் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சுயவிடமைப்பு மானிய உதவித் திட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டத்திற்கு 10 லட்சம் ரூபாவும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 170 லட்சம் ரூபாவும், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 50 இலட்சம் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 10 இலட்சம் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 45இலட்சம் ரூபாவும், திருகோணமலை மாவட்டத்திற்கு 30 இலட்சம் ரூபாவும், வவுனியா மாவட்டத்திற்கு 22 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

ஒருங்கிணைந்தநிவாரணத்திட்டத்தின்கீழ் நஷ்ட ஈடுவழங்க அம்பாறை மாவட்டத்திற்கு 192 லட்சம் ரூபாவும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 932 இலட்சம் ரூபாவும், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 1445 இலட்சம் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 305 இலட்சம் ரூபாவும், மன்னர் மாவட்டத்திற்கு 210 இலட்சம் ரூபாவும், திருகோணமலை மாவட்டத்திற்கு 362 இலட்சம் ரூபாவும்· வவுனியா மாவட்டத்திற்கு 335 இலட்சம் இதுவரை வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம் தெரிவித்தார். (அ-150)

### கடையில் கொள்ளை

யாழ்ப்பாணம், மே 17

நேற்று நண்பகல் நாவலர் வீதி — மருதடிச் சந்தியில் உள்ள கடை ஒன்றில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

கடையில் இருந்த 5 ஆயிரம் ரூபா பணம் அபகரித்துச் செல்லப்பட்டது.

கடை உரிமையாளர் பணத்தை எண்ணி வங்கிக்குக் கொண்டு செல்ல தயாராக வைத்திருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் அவரைத் தாக்கிவிட்டு பணத்தை பறித்துக்கொண்டு ஓடிவிட்டனராம்

### கப்டன் பலி

யாழ்ப்பாணத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டை ஒன்றில் இந்திய அமைதிப்படையின் கப்டன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

# திருமலை கச்சேரியின் சில பிரிவுகள் நகரத்தில் இயங்கத் தொடங்கின

— திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, மே 17

திருகோணமலை கச்சேரியின் சில பிரிவுகள் கடந்த திங்கட்கிழமை முதல் நகரத்திலுள்ள வேறு இடங்களில் இயங்கத் தொடங்கியுள்ளன.

குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து பிரட்ரிக் கோட்டையில் இயங்கும் கச்சேரிக்கு தமிழ் ஊழியர்கள் கடமைக்குச் செல்ல மறுத்து வந்தனர். இதனுல் கடந்த ஒருமாத காலமாக கச்சேரியில் அலுவல்கள் நடைபெறவில்லை.

இதனைத் தொடர்ந்து வட, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை அடுத்தே சில பிரிவுகள் திங்களன்று நகரத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன.

ஓய்வூதியக் கிளை, உணவு கட்டுப்பாட்டுக் கிளை ஆகியன உள்துறைமுக வீதியிலுள்ள உ. அ. அ. அலுவலகத்திலும், கணக்குப்பிரிவு, சமூக சேவைகள் புனர்வாழ்வுக் கிளை ஆகியன நெல் சந்தைப்படுத்தும் சபை அலுவலகத்திலும் இயங்க ஆரம்பித்துள்ளன.

இது இவ்வாறிருக்க 'பிரட்ரிக்' கோட்டையில் இருக்கும் சிங்கள அகதிகளை மீளக்குடியேற்றுவது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு, மத்திய அரசின் புனர்வாழ்வு துணை அமைச்சர் திரு வின்சன்ட் பெரேரா நாளை 18 ஆம் திகதி திருமலை வருகிறார். (ஓ-150)

### கோபாலரத்தினம் காலமானர்

யாழ்ப்பாணம், மே 17

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்நாட்டு நிர்வாக அமைச்சுச் செயலாளர் திரு. எஸ். கோபாலரத்தினம் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் மாரடைப்பால் மரணமானர்.

இவர் முன்னர் யாழ். செயலகத்தில் தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிந்தவர்.

திரு. கோபாலரத்தினத்தின் பூதவுடல் கொழும்பில் இருந்து இங்கு கொண்டுவரப்பட்டு ஈமக்கிரியைகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

### மிருசுவிலில் பதற்றம்

யாழ்ப்பாணம், மே 17

மிருசுவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதத்தை அடுத்து அப்பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. அங்கிருந்து அனேகர் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை மிருசுவில், கொடிகாமம் பகுதிகளில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது மிருசுவில் பகுதியில் ஒருவரும் கொடிகாமம் பகுதியில் இருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானர்கள் என அறிய வந்தது.

மிருசுவிலில் கொலையுண்டவர் புத்திக் கூர்மை குறைந்தவர் எனவும் கொடிகாமத்தில் கொலையுண்டவர்களில் ஒருவர் ரயில்வே ஊழியர் எனவும் ஏனையவர் கடை உரிமையாளர் எனவும் தெரிய வருகிறது.

### நெடுங்கேணிப் பகுதியில்...

வவுனியா, மே 17

நெடுங்கேணியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோதல்கள் அசம்பாவிதங்களைத் தொடர்ந்து உத்தியோகபற்றற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு இடம்பெற்ற தேடுதலின் போது ஞாயிற்றுக்கிழமை இரு பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் ஏழு வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன என்றும் வவுனியாவுக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நெடுங்கேணி வில்வையடி பிள்ளையார் கோவில் பகுதியில் பொன்னையா என்ற 65 வயது வயோதிபர் சூட்டுக்கு இலக்காகி பலியாகியுள்ளார்.

நெடுங்கேணி கடைவீதிப் பகுதியில் ஹோட்டல் ஒன்றில் சமையற்காரராகப் பணி புரிந்த கந்தையா தேவராசா [45 வயது] என்பவர் சூட்டுக்குப் பலியாகியுள்ளார்-

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனே

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முன்னணி எழுத்தாளர்களின் எல்லா வகையான நாவல்கள், மற்றும் சோதிடம் வைத்தியம் சிறுவர்களுக்கான கதைப்புத்தகங்கள் அனைத்தும் நீங்கள் வந்து தெரிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை (புத்தகக் களஞ்சியம்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/2516)

ஆறு கிழமைகள் நிரம்பிய பொமனேரியன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கிறிஸ்ரி, 261/10, கொழும்புத்துறை வீதி, (கணேசர் சந்திக்கு அருகாமை) கொழும்புத்துறை. [10946]

## செங்கை ஆழியானின் தீராதசுமைகள்

வீரகேசரியில் தொடராக வெளிவந்த ''தீராத சுமைகள்'' சமூகநாவல் மண்ணின் தாகம் என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளது. 25/- ரூபா. ராஜன்புத்தகசாலை பஸ்நிலையம் யாழ்ப்பாணம். துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னுகம். கவிதாஸ் ஸ்ரோர்ஸ் வவுனியா. சிவம் புத்தகசாலை சாவகச்சேரி. (530)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline, வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் 16-05-89 இலும் Golden comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், 17-5-89 இலும் Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 18-5-89 இலும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (10939)

## 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமிழ் மொழியில் அதிக புள்ளிகள் பெறவும் வசதியான பாடசாலையில் அனுமதி கோரவும் வழிசெய்யும் கட்டுரைத் தேன் துளி 60. ஆக்கம்: க.சொக்கலிங்கம் M.A. உயர் கல்விப் பதிப்பக வெளியீடு. விலை ரூபா 17/50. புத்தகசாலைகளில் கிடைக்கும் (10883)

## FOR SALE

National T V 20'' colour Grundig T.V 20'' General T.V 14'' N. E. C. T.V 17'' B/W - National X/V 390 Deck J. V C Deck model H. R. 3330 S. T. L Video, Club No. 3, Model Market Thirunelvely. (522)

## மணமகன் தேவை

இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த அழகிய தோற்றமுடைய 35 வயது [கனடா சிற்றிசன்) மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. தாரமிழந்தவர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தொடர்பு: ''ABCDE'' 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (534)

யாழ்ப்பாண கத்தோலிக்க குருகுல மணப்பெண்ணுக்கு 35-41வயதுக்குஇடைப்பட்ட மணமகன் தேவை. போதிய சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [10952]

## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய அழகிய [கனடா சிற்றிசன்] கிரகபாவம் அற்ற மணமகனுக்கு படித்த அழகிய பெண் தேவை. தொடர்பு; ''ABCDE'' 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. [533]

யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 37 வயது நிரம்பிய அழகிய தோற்றம் உடைய (கனடா சிற்றிசன்) மணமகனுக்கு படித்த அழகிய பெண் தேவை கிரகபாவம் கூடியது ''AB DE'' 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, (532)

## தேவை

எமது தேநீர்ச்சாலைக்கு பிட்டு, இடியப்பம் போன்ற பலகாரங்கள் தயாரித்து சமையல் செய்யக்கூடியவர் உடன் தேவை. தொடர்பு: R. R., சந்திரன், வணுஜ் ஓட்டல் சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி. (10938)

## இடமாற்றம்

தற்பொழுது A.K. தங்கராஜா சோதிடர் அவர்கள் திருநெல்வேலி அரசடி அம்மன் கோயில் முன்பாக சோதிட நிலையம் அமைத்துள்ளார் [10947]

## தவறிவிட்டது

துரைசிங்கம் தவராசசிங்கம் 622721937V ஆகிய எனது அடையாள அட்டையும் வாகனலைசன்ஸ் 17340 மோட்டார் சைக்கிள் பத்திரங்களும் கோப்பாயில் இருந்து கோண்டாவில்சந்திக்கும் இடையில் மானிப்பாய்வீதியில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [535]

## 5ஆம் ஆண்டு புலமைப் பரிசுப் பரீட்சை

புதிய சிபார்சுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட புலமைப் பரிசுப் பரீட்சைக்கான கணிதமும், தமிழும் விற்பனையாகிறது. ஆக்கியோன் ஆ.ந. இராஜேந்திரன். விலை ரூபா 40 மட்டும். கிடைக்கும் இடங்கள் யாழ். முன்னணி புத்தகசாலைகள். [529]

## வகுப்பு

A/L Paper 89 இரசாயனம் ஆசிரியர் மோகன் [B.sc.] No-4, 6 th லேன், கந்தர் மடம். திங்கள், வெள்ளி4p.m. (10950)

## Wanted Accountant Femae

For A leading Firm Person with at Least 5 years Experience and Accountancy Qualification Apply Before 25/5/89 519, C/o Uthayan Jaffna. [536]

## பிரார்த்தனை

இயேசுவின் திரு இருதயம் உலகம் முழுவதும் என்றென்றும் வணங்கவும், போற்றவும், நேசிக்கவும், மகிமைப்படுத்தவும் படுவதாக.

இயேசுவின் திரு இருதயமே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

கைவிடப்பட்டவர்களின் உபகாரியான புனித யூதாததேயுவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இச்செபத்தை தினமும் ஒன்பதுமுறை செபித்து வந்தால் நீங்கள் கேட்கும் விண்ணப்பங்கள் அருளப்படும்.

மன்றாட்டுக்கள் கேட்கப்பட்டமைக்காக இயேசுவின் திரு இருதயத்துக்கும், புனித யூதாததேயுக்கும் நன்றி.

Publication must be Promised

T. R. Chandramathy. (10928)

## பாஷையூரில் அடிக்கடி மின்தடை

யாழ்ப்பாணம், மே 17

பாஷையூர் மூன்றும் குறுக்குத்தெரு பகுதிகளில் வசிக்கும் மக்கள் அடிக்கடி ஏற்படும் மின்தடையால் பாதிக்கப்படுகின்றூர்கள் என அறியப்படுகிறது.

குறிப்பாக இரவு ஏழு மணிக்குப் பின் வெளிச்சம் மிகவும் மங்கலாக இருக்கிறது என மக்கள் குறைப்படுகிறூர்கள். (க)

---

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் வைகாசித் திங்கள் 6ஆம் நாள் (19. 05. 1989) வெள்ளிக்கிழமை மதியம் 12 மணி 10 நிமிடம் முதல் 12 மணி 40 நிமிடம் வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

| எனது சகோதரர் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
| --- | --- |
| **சிவலோகநாதன்** | **தனலட்சுமி** (கீதா) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. இ. பரலோகநாதன்
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

திரு. திருமதி நாகேந்திரம்
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)
999 (535), காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

(தனிப்பட்ட அழைப்பு இல்லையென்பதால் இதையே இருவீட்டார் அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.) (10949)

---

## DIPLOMA IN HOME ECONOMICS

- Cake Icing
- Cookery
- Flower Making
- Handi - Craft
- Needle Work
- Hair Styling
- Glass & Fabric Painting
- கோலம் போடுதல்

● பயிற்சிக் காலம்: 6 மாதங்கள்

- வகுப்புக்கள் திங்கள், புதன், வியாழன் ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
- தொழில் புரியும் பெண்களின் வசதி கருதி ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.
- தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய வகுப்பில் மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

# KALALAYAAH

(Academy of Culinary & Fine Arts)
(Regd)
Victoria Road,
JAFFNA. [சி-2585]

---

# Professional Exams

| | | | Commencement |
| --- | --- | --- | --- |
| C. I. M. A. | | Stage 1 | 3 - 6 - 89 |
| | | Stage 2 | 10 - 6 - 89 |
| I. D. P. M. | | Part 1 | 3 - 6 - 89 |
| A. A. T. | (Sri Lanka) | Stage 1 | 3 - 6 - 89 |
| I. A. B. | | (Foundation) | 5 - 6 - 89 |
| | | (Inter) | 5 - 6 - 89 |
| | | (Final) | 10 - 6 - 89 |
| BOOK-KEEPING | | (Pitmans) | 5 - 6 - 89 |
| COMPUTER | | (Basic) | 20 - 5 - 89 |

An Electronic Calculator will be Issued FREE for CIMA & IDPM Students

Panel of Lecturers include:
JEYARATNAM, KAILAYAPILLAI, KATHIRGAMANATHAN, NAVARENDRAN, PUSHPA, THAVARATNASINGHAM, SIVAPATHASUNDARAM.

- Cyclostyled Notes & Question Papers will be issued
- Qualified Experienced and dedicated panel of lecturers
- Moderate fees which can be paid in instalments
- Registration with Foreign Institutes will be handled by us

For Career Guidance and advice Meet S. P. Sivapathasundaram

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Pioneers in Accountancy Studies)
16, 3rd Cross Street
(Near O. L. R Church)
JAFFNA (சி/2583)

---

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு ஏற்ற உணவு

## ஜீவாகாரம்

இதில் புரதம், விட்டமின், தாதுப்பொருள்களும், கலோரியும் நிறைந்துள்ளது.

அண்ணு தொழிலகம்,
இணுவில். (சி/2492)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 02 - 07 - 1969

தாயக மண்ணில்: 29 - 05 - 1988

### ஜெயச்சந்திரன் (சிலன்)

(பசுணயக்கா)

திதி: 17 — 05 — 1989


தமிழ் மண் காக்க
தன் இனம் ஓங்க
களம் புகுந்த சிலனே
உனது அருமை உயிரை
வீரத்தாய் அழைத்தாளோ?
எங்கள் வீட்டிற்கும்
ஒளி விளக்காய் வந்த சிலனே
உன் பிரிவால் வாடும்:

அன்புத் தந்தை, தாய், உடன்பிறப்புகள், சித்தப்பாமார், சின்னம்மாமார், மாமாமார், மாமிமார், அம்மம்மா, உற்றூர். உறவினர்கள் ஆகியோர் உன் ஆத்மா சாந்தியடைய முருகனை பிரார்த்திக்கின்றூர்கள்.

உடுப்பிட்டி ரோட்
தொண்டைமானுறு. (605)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கந்தையா செல்வநாயகம்

(முன்னுள் பட்டின சபைத்தலைவரும், கட்டட ஒப்பந்தகாரரும், மானிப்பாய்)

தோற்றம்: 23 08- 1909 மறைவு: 28- 05- 1988

ஆண்டு ஒன்று ஆகிவிட்ட போதிலும்
ஆறிடவில்லையப்பா எங்கள் மனம்
ஆருயிர்த் தந்தையே! அன்பின் திருவுருவே!
உங்கள் அன்புக்கு நிகராக எவருமுண்டோ! தந்தையே?
கடமைகள் செய்தது போதும் என்று
அந்தக் கடவுள் உங்களை அழைத்துக்
கொண்டாலும் எம்மைக் காத்து
நிற்பதை மனக் கண்ணிலே கண்டு
உளந் தேறுகின்றோம்:

உங்கள் மறைவை நினைவு கூரும் அன்பு நெஞ்சங்கள்
அன்பு மனைவி, மகன்மார், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''மானியம் பதி''
மானிப்பாய். (10943)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற
# திரு நெறிய தெய்வீக மாநாடும் திருஞானசம்பந்தர் பெருவிழாவும்

யாழ்ப்பாணம், மே 17

இம்மாதம் 9ஆம் திகதி காலை முதல் மாலைவரை நல்லை ஆதீனத்தில் திருநெறிய தெய்வீக மாநாடும், திருஞானசம்பந்தப் பெருமானின் பெருவிழாவும் நடைபெற்றன.

பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி நடைபெற்று, விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன.

மாலையில் குருமகா சந்நிதானம் ஸ்ரீல ஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகளின் அருள் நோக்குடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

நல்லூர் - நாதஸ்வர வித்துவான் திரு. பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

நல்லை ஆதீன ஓதுவார் மூர்த்திகள், தமிழ்மணி திரு. வி. எஸ். கணேசசுந்தரம், தேவார இசைமணி, திரு. சி. தில்லைமணி, அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, தேவார இசைமணி, ,ாவடியூர் திரு. இரா. திருஞானசம்பந்தன் ஆகியோர் திருஞானசம்பந்தப் பெருமானின் திருமுறைப் பண்களைப் பக்தியுடன், பக்கவாத்திய சகிதம் ஓதினர்.

அதன்பின் சிறப்பு ஆராதனைகள் இடம்பெற்று, திருஞானசம்பந்தப் பெருமான் எழுந்தருளி திருஉலாச் சென்று சிவன்கோயிலை அடைந்து அங்கு 'திருமுலைப்பால்' உற்சவம் நடைபெற்றது.

அப்பர் சுவாமிகள் எழுந்தருளி வந்து 'திருக்கதவு திறக்கப் பாடி அருளியமையும், திருக்கதவம் மூடியருள ஞானசம்பந்தப் பெருமான் அருளியமையும், அதனையடுத்து முத்துப் பல்லக்குக் காட்சியும் இடம்பெற்றன.

நல்லை ஆதீன ஓதுவார் மூர்த்திகள் பதிகங்களையும் பண்ணோடு ஓதினார்கள்.

## உள்ளூரிலேயே பம்பாய் வெங்காய விதை
### விவசாயப் பகுதி திட்டம்

யாழ்ப்பாணம் மே 17

யாழ் மாவட்டத்தில் சிறுபோகம் தவிர்ந்த மாற்றுக் காலத்தில் பம்பாய் வெங்காயத்தை பயிரிடத் தேவையான விதைகளை இறக்குமதி செய்யாமல் இங்கேயேபெறுவதற்கு புதிய முறை ஒன்றை விவசாயப் பகுதிமுதற்தடவையாக அறிமுகம் செய்யவிருக்கிறது.

கடந்த வருடம் பம்பாய் வெங்காயச் செய்கை எதிர்பார்த்த இலக்கை விட கூடுதல் விளைச்சலைத் தந்ததை அடுத்து இவ் வருடம் கூடுதல் பரப்பளவில் சிறுபோகத்தில் செய்கைபண்ணப்பட்டுள்ளது.

அராலி, மானிப்பாய், மட்டுவில் பகுதிகளில் கூடுதல் பரப்பில் இம்முறை பம்பாவெங்காயம் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

மாற்றுக்காலத்தில் விதை வெங்காயத்தை இறக்குமதி செய்யாமல் இங்கேயே விதை வெங்காயத்தைப் பெற புதிய திட்டம் ஒன்றை விவசாயப் பகுதி அறிமுகம்செய்துள்ளது

இத்திட்டத்தின் படி நெருக்கமாக வெங்காயத்தை நட்டு மூன்று மாதம் வளர விட்டு பின்பு தண்டில் வரும் உலர் குமிழ்களை எடுத்து பிடியாகக் கட்டி வைத்து பின் மாற்றுக் காலத்தில் நடமுடியும்.

உலர் குமிழ் உற்பத்தித் திட்டமான இத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு 20 கிலோ ரம்மூர் சிவப்பு இன பம்பாய் வெங்காயம் வழங்கப்படவிருப்பதாக விவசாய உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். சி. பத்மநாதன் உதயனுக்கு தெரிவித்தார். (இ-3)

### வாழ்வக வாரம்

தெல்லிப்பழை விழிப்புலவலுவிழந்தோர் வாழ்வகத்தினர் யூன்மாதம் 22 ஆம் திகதியிலிருந்து யூலை 02 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தை வாழ்வக வாரமாகக் கொண்டாட முடிவு செய்துள்ளனர். (க-90)

## அம்பனைச் சம்பவத்தில்
### பொதுமக்களில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 17

கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பனையில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் பொதுமக்களில் ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் பன்னாலையைச் சேர்ந்த இளையகுட்டி சண்முகலிங்கம் (வயது 40) என்று தெரிவிக்கப்படுகிறது.

வேலியோரத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சிலிண்டர் கண்ணி வெடி வெடித்த போதே இவர் காயமடைந்தார்.

உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர் திங்கட்கிழமை யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## நாவற்குழி அறிவொளி மன்ற அறிவியல் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 17

நாவற்குழி அறிவொளி மன்றத்தின் அறிவியல் போட்டிகள் திரு. பொ. சுப்பையாவின் தலைமையில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றவர்கள் வருமாறு;

இசைப் போட்டி: ஆரம்ப பிரிவு 1. இ. தயானந்தினி 2. இ. சுகிர்தன் கீழ்ப்பிரிவு: 1. க. ஜெனீவா, 2. நா. வெண்மதி மத்திய பிரிவு: 1. நா. செவ்வந்தி 2. நா. சுதன் மேற்பிரிவு: 1. து. கீதா 2. க. சுகந்தினி மன்ற மாணவிகள் 1. வ. இன்பலதா 2. சி. விஜயகலா தமிழ் பேச்சு; கீழ்ப்பிரிவு: 1. வி. தயாபரதேவி 2. க. ஜெனீவா மத்தய பிரிவு: 1. ம. சருணாகரன் 2. நா. செவ்வந்தி மேற்பிரிவு: 1. து. கீதா ஆங்கில உறுப்பெழுத்து: கீழ்ப்பிரிவு: 1. ச. சத்தியராணி 2. வி. தயாபரதேவி ஆங்கிலப் பாட்டு: கீழ்ப்பிரிவு 1. வி. தயாபரதேவி 2. இ. டினோபா மத்திய பிரிவு: 1. து. சுபா 2. நா. சுதன் மேற்பிரிவு: 1. ஞா. சோபனு ஆங்கிலப் பேச்சு: மத்தியபிரிவு 1. நா. சுதன் 2. நா. செவ்வந்தி மேற்பிரிவு: 1. ஞா. சோபனு 2. க. கஜமுகன்.

பொது அறிவுப் போட்டி பாடசாலை மாணவர்கள் 1. க. கஜமுகன் 2. க. இரமணன் பழைய மாணவர்கள் 1. செ. குலேந்திரன் 2. செல்வி க. றஜீவா சபையோர்: 1. செல்வி இ. இரஞ்சினி 2. செல்வன் கு. குமாரதாசன்.

நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சோ. சடாச்சரம் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். (ச

## வடக்கு- கிழக்கு மாகாணத்துக்கு பொறுப்பாக பிரிகேடியர் சில்வா

கொழும்பு, மே 17

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான இலங்கை இராணுவப் பிரிவின் தளபதியாக பிரிகேடியர் ஜே. ஆர். எஸ். டி. சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வடமத்திய மற்றும் மத்திய மாகாணத்துக்கு பிரிகேடியர் விஜய விமலரத்தினவும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பொறுப்புத் தளபதியாக மேஜர் ஜெனரல் சி வைத்தியரத்தினவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இம்மாற்றங்கள் இம் மாதம் 15 முதல் அமுலுக்கு வந்திருப்பதாக இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார். (இ-எ)

## மாணவர் ஒன்றிய முன்மாதிரி

மானிப்பாய், மே 17

மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தினர் ஐயாயிரம் ரூபா செலவில் குடிநீர் வசதிக்கான குழாய்களையும் தொட்டியையும் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இந்த முன்மாதிரியான செயலை வித்தியாலய அதிபர் திரு. மு. அருணாசலம் பாராட்டியுள்ளார். (க-90)

## மாணவருக்கு பாலர்கல்வியே சிறந்த அத்திவாரமாகும்
### சேவை பாராட்டு விழாவில் உரை

காரைநகர், மே 17

"மாணவர்களின் வாழ்க்கையில் பாலர் கல்வியே சிறந்த அத்திவாரமாக அமைந்து அவர்களை வளர்ச்சி அடையச் செய்கின்றது. பாலருக்குக் கல்வி போதிக்கும் புனிதக் கடமையை கடந்த 35 ஆண்டுகளாக ஆசிரியை திருமதி பஞ்சன்மணி இராசதுரை செய்து வந்துள்ளார்"

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய ஆசிரியை திருமதி ம. இராசதுரையைக் கௌரவித்து நடைபெற்ற சேவைநல பாராட்டு விழாவில் கல்லூரி அதிபர் திரு. செ. தேவதாசன் மேற்கண்டவாறு கூறினர்.

திருமதி இராசதுரையின் சேவைகளைப் பாராட்டிமுன்னாள் அதிபர் திரு. சு. சுப்பையா, உபஅதிபர் திருமதி ம. தம்பிராசா, திரு.சி.பொன்னம்பலம், திரு. வி. இரட்டாய் திருமதி க. காராளசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள். ஆசிரியர் திரு. க சதாசிவம் நன்றியுரை நிகழ்த்தினர்!

ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டுப் பாமாலையும் பரிசில்களும் வழங்கிஓய்வு பெறும் ஆசிரியை திருமதி ம. இராசதுரையைக் கௌரவித்தனர் (க 73)

### கி.சே. அலுவலர் பிரிவுகள்

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு 31 கிராம சேவை அலுவலர் பிரிவுகளைக் கொண்டதாக அமைய இருக்கின்றது. (க-167)

### வட்டுக்கோட்டையில் வர்த்தக ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம் மே 17

வட்டுக்கோட்டை வர்த்தக ஊழியர்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. அ. குலரத்தினம் தலைமையில் கண்ணகை அம்மன் கோவில் வீதியில் நடைபெற்றது.

ஊழியர்களும் பல வர்த்தக முகவர்களும் இதில் பங்குபற்றினர்கள்.

வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர். உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது (ச)

## யாழ். தமிழரின் உச்சரிப்பும் ஓசைநயமும் உவகைதருகின்றன
### முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. பேச்சு

நுவரெலியா மே 17

"இலங்கைத் தமிழ் மக்களின், குறிப்பாக யாழ் தமிழ் மக்களின் தமிழ் மொழி உச்சரிப்பும் பேச்சு ஓசை நயமும் எனக்கு உவகை தருகின்றன."

முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் டிக்கோயா ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயிலுக்கு விஜயம் செய்த போது நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், மனத் தூய்மையே இறைவனை அடைய வழி ஆகும் நல்லதையே நினைத்து நல்லதையே செய்வதும் இறைவழிபாடு தான் என்றார்.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் கோயிலுக்குச் சென்ற போது ஆலயகுரு ஸ்ரீ நா. நாகேந்திர சர்மா பூஜை வழிபாடுகளை நடத்தி பிரசாதம் வழங்கினர்.

ஆலய தருமகர்த்தா திரு. கிருஷ்ணசாமி செட்டியார் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். ஆலய செயலர் திரு. புஷ்பநாதன் நன்றி உரை கூறினர் (க-58)

## பூக்கொண்டு தப்பாமல் சார்வார் தெய்வ அருளைப் பெறுவர்
### நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை

'கோவில் கும்பாபிஷேக தினத்தன்று மட்டும் கோவிலுக்குச் சென்று வழிபட்டால் போதாது. அடியார்கள் தினமும் கோவிலுக்குச் சென்று வணங்க வேண்டும். அப்போது தான் இறைவன் அருளைப் பெறமுடியும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வண்ணார் பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ பகவதி மாரிஅம்பாள் கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகததின் போது இவ்வாறு ஆசியுரை வழங்கினர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள் தமது ஆசியுரையில் மேலும் கூறியதாவது;

'புதிய ஆலயங்கள் கட்டுவதைவிட கட்டப்பட்ட ஆலயங்களை பராமரிப்பதே விசேடமானது.

பூக்கொண்டு தப்பாமல் சார்வார்களுக்கே தெய்வ அருள் உண்டு.

அன்பர்களுக்கே அம்பிகை அருள் செய்வாள்.

பேராசிரியர் திரு. கா. கைலாசநாதக்குருக்கள் தமது தலைமையுரையின்போது கூறியதாவது;

தந்தையை விடத்தாயிடம் தான் எதனையும் பெற்றுக் கொள்வது இலகு.

வேண்டாமென மறுத்தாலும் சற்று கூடுதலாக உணவைப் பிள்ளைக்கு ஊட்டிவிட நினைப்பவள் தாய்.

தேவைக்கு அதிகமாகக் கொடுக்க எண்ணுபவள் தாய்.

அந்தத் தாயிடம் அன்பு செலுத்தி எமக்கு வேண்டிய சகலதையும் பெற்றுக் கொள்ளலாம்.

அம்பிகை நமக்கு தேவையானபோது வேண்டியவற்றை வழங்கக் காத்திருக்கிறாள்.

நாம் தான் அவளை நாட மறக்கின்றோம்.

தினமும் அவளிடம் செல்லுங்கள்.

பக்தியோடு பாடுங்கள். வேண்டுவதைக் கேளுங்கள்.

சகல சம்பத்தையும் அவள் மனம் குளிர்ந்தால் எமக்கு அள்ளி அள்ளித் தருவாள்.

இப்படி அவர் கூறினர். [ச-90]

கல்விப் பட்டப்
பின்படிப்பு

பகுதிநேரம்/முழுநேரம்
1988 / 89

மேற் குறிப்பிட்ட பாடநெறிக்குப் பதிவு செய்த முழுநேர மாணவர்களுக்கு 23- 05- 1989 ஆம் திகதியும், பகுதி நேர மாணவர்களுக்கு 27- 05- 1989 ஆம் திகதியும் விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

- பதில் பதிவாளர்
யாழ். பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்
15-05-1989

(C/2489)

JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI

Full Time Technical Educational Institute Offering Following Facilities

- FULLY EQUIPPED LABORATORIES
- HOSTEL FACILITIES FOR MALE & FEMALE STUDENTS
- LIBRARY
- SPORTS & GAMES & CULTURAL ACTIVITIES

பின்வரும் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் JULY 1989 ஆரம்பமாகின்றன:

1. TECHNICIAN DIPLOMA COURSES (ஆங்கில மூலம்)

NDT தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளுக்கேற்பவும் அமைக்கப்பட்டது.

i) Electronics & Communication
ii) Mechanical Engineering
iii) Electrical Engineering
iv) Civil Engineering (2 Years)

● கல்வித்தகைமை:- G. C. E. (O/L) கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் திறமைச் சித்தி ● காலம்:- 3 வருடங்கள்

2. DIPLOMA COURSES (ஆங்கில மூலம்)

i) Draughtmanship (Civil)
ii) Computer Programming & Data Processing

(Basic, Cobol & d Base III +)

● கல்வித்தகைமை:- G. C. E. (O/L) கணிதம் உட்பட 6 பாடங்களில் திறமைச் சித்தி ● காலம்:- One Year

3. CRAFT CERTIFICATE COURSES (தமிழ் மூலம்)

i) இயந்திர சாலைப் பயிற்சி (Machine Shop Practice)
ii) ஒட்டுனர் பயிற்சி (Welding Practice)
iii) உலோக வார்ப்பு (Foundry)
iv) இயந்திரவியல் தொழில் பயிலுநர் (Mechanical Craftsman)

● கல்வித் தகைமை:- G. C. E. (O/L) படித்திருத்தல் வேண்டும்.
● காலம்:- 1 வருடம்

முக்கிய குறிப்பு:- நிறுவன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் மட்டுமே விண்ணப்பிக்கவும். விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 5/- செலுத்தி நேரடியாகவோ அல்லது ரூபா 1/- பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பி தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

● விண்ணப்ப முடிவு திகதி: 15 - 06 - 1989
● நேர்முகப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- பணிப்பாளர்
[சி-2582]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க அறிவித்தல்

### வட கிழக்கு மாகாண பிரஜைகள் தொண்டர் படைக்கும் பிரஜைகள் தொண்டர் காலாட் படைக்குமான ஆட்சேர்ப்பு

1. வட கிழக்கு மாகாண பிரஜைகள் தொண்டர் படைக்கும், பிரஜைகள் தொண்டர் காலாட் படைக்கும் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

   (அ) தொண்டர் படை (பொலீஸ் கொஸ்தாப்பல் பதவிக்கு சமமானது)

   (ஆ) உப குழு ஏவுனர் (உதவிப் பொலீஸ் பரிசோதகர் பதவிக்கு சமமானது)

   (இ) மாவட்ட ஏவுனர் (உதவிப் பொலீஸ் அதிகாரி பதவிக்கு சமமானது)

2. பொருத்தமான தகுதி உடையவர்கள், 1989 - 06 - 01ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர், தமது விண்ணப்பங்களை "படைத் தலைவர் பிரஜைகள் தொண்டர் படைத் தலைமை அலுவலகம், டொக்கியாட் வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. தகைமைகள்: (1) தொண்டர் படை

   (அ) ஆகக் குறைந்தது 8 ஆம் வகுப்பு சித்தியெய்தி இருத்தல் வேண்டும். (போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப் படாத விடத்து, கல்வித் தகைமையில் நெகிழ்வு காட்டப்படலாம்).

   (ஆ) பதினெட்டு வயதுக்குக் குறையாதவராகவும், முப்பது (30) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

   (இ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

   (ஈ) உயரம்: ஐந்தடி இரண்டு அங்குலம்.

   (உ) மார்பளவு: முப்பது அங்குலம்.

   (2) உபகுழு ஏவுனர்:

   (அ) கலவிப் பொதுத் தராதரப் பரீட்சையில் குறைந்தது 6 பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

   (ஆ) ப னெட்டு வயதுக்குக் குறையாதவராகவும் (30) முப்பது வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

   (இ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

   (ஈ) உயரம்: குறைந்தது ஐந்தடி நாலங்குலம்.

   (உ) மார்பளவு: முப்பத்திரண்டு அங்குலம்.

   (3) மாவட்ட ஏவுனர்:

   (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில், பட்டதாரிப் பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

   (ஆ) பதினெட்டு வயதுக்குக் குறையாதவராகவும், (30) முப்பது வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (வயது வரம்பு 35 வரைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.)

   (இ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

   (ஈ) உயரம்: குறைந்தது ஐந்தடி.

   (உ) மார்பளவு; முப்பத்திரண்டு அங்குலம்.

4. தெரிவு செய்யப்பட்டவர்கள், வட கிழக்கு மாகாணத்தில் எத்தப் பகுதியிலும் சேவை செய்யத் தயாராக இருத்தல் வேண்டும். இருப்பினும் சொந்த மாவட்டத்தில் சேவை செய்ய முன்னுரிமை அளிக்கப்படலாம்.

5. தொண்டர் படையினருக்கும், உப குழு ஏவுனருக்கும், மாவட்ட ஏவுனருக்கும் இலங்கை ஒதுக்குப்படையில் இருப்பவர்களுக்கு, வழங்கப்படும் நாள் சம்பள அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். இத்துடன் கஷ்ட நிவாரணமாக நாளொன்றுக்கு ரூபா 20/- வீதம் சகல பதவியினருக்கும் வழங்கப்படும். இதன் அடிப்படையில்,

   (1) ஓர் தொண்டர் படை வீரர் ஒருவருக்கு 30 நாட்களும் கடமையாற்றினால், ரூபா இரண்டாயிரத்து நாநூற்று ஐம்பதுக்கு கூடிய தொகை கிடைக்கப் பெறும்.

   (2) உப குழு ஏவுனருக்கு (S.I.) இலங்கை ஒதுக்குப்படையில் உதவி பொலீஸ் பரிசோதகருக்கு வழங்கப்படும் சமமான வேதனம் வழங்கப்படும்,

   (3) மாவட்ட ஏவுனருக்கு இலங்கை ஒதுக்குப்படையில் உதவி பொலீஸ் அதிகாரிக்கு (A.S.P.) வழங்கப்படும் சமமான வேதனம் வழங்கப்படும்.

6. இலவச சீருடைத் தொகுதி ஒன்றும் வசிப்பிட வசதியும் வழங்கப்படும்.

7. இலங்கை பொலீஸ் ஒதுக்குப்படையினருக்கு வழங்கப்படும் சகல சலுகைகளும் பிரஜைகள் தொண்டர் படையினருக்கும் வழங்கப்படும் விடுமுறை, நஷ்ட ஈடு போன்றவையும் இலங்கை பொலீஸ் ஒதுக்குப் படையினருக்கு வழங்கப்படுவது போல வழங்கப்படும்.

8. பயிற்சி முடிவில் பொருத்தமான ஆயுதங்களும் வழங்கப்படும்.

9. இலங்கைப் பிரஜைகள் தொண்டர் படைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் தாம் விரும்பும் பட்சத்தில் அவர்களின் கல்வித்தகைமை, சேவை ஒழுங்கு ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை பிரஜைகள் தொண்டர் காலாட் படையில் சேரவும் அனுமதிக்கப்படுவர்.

10. மாதிரி விண்ணப்பப் படிவம்:-

    01. முழுப் பெயர்:-
    02. விலாசம்:-
    03. அதன் பொலீஸ் நிலையம்:-
    04. தேர்தல் தொகுதி;-
    05. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-
    06. பிறந்த திகதி:-
    07. 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திகதியன்று வயது:-
        வயது:- வருடங்கள்;- மாதங்கள்:-
    08. உயரம்: அடி: அங்குலம்:
    09. மார்பு: அங்குலம்:
    10. கல்வித் தகைமைகள்:-

திகதி;- விண்ணப்பதாரியின் கையொப்பம்.

விண்ணப்பங்கள் இங்கு குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் கீழ் வரும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

**படைத் தலைவர்,**
**இலங்கை பிரஜைகள் தொண்டர் படை.**

தலைமை அலுவலகம்,
இலங்கைப் பிரஜைகள் தொண்டர் படை,
டொக்கியாட் வீதி,
திருகோணமலை.
15 - 03 - 1989

[சி-2408]

வவுனிக்குளம்

## மகாவித்தியாலயத்துக்கு நூலகம் - ஆய்வுகூடம்

மாங்குளம், மே. 17

இப்பாடசாலைக்கு விஞ்ஞான கூடமும். நூலகமும் அமைத்துக் கொடுக்க உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் முயற்சி எடுப்பேன்.

வவுனிக்குளம் 2 ஆம் யூனிற் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கொத்தணி அதிபர் திரு. சிவபாலன் மேற்கண்டவாறு கூறினார்.

விளையாட்டுப் போட்டிக்கு கல்லூரி அதிபர் திரு துரைசிங்கம் தலைமை வகித்தார்.

கொத்தணி அதிபர் சிவபாலன் தமது உரையில் மேலும் கூறியதாவது;

''விளையாட்டுக்கள் இன்றுடன் நிறுத்தப்படுவதல்ல. தொடர்ந்தும் விளையாட்டுக்களில் மாணவர் ஆர்வம் கொள்ள வேண்டும்.

விளையாட்டுக்களில் பங்கு கொள்வதால் ஒருவன் பூரண மனிதனாகிறான் என்றார்.

இளங்கோ இல்லம் முதலாம் இடத்தையும், பாரதி இல்லம் இரண்டாம் இடத்தையும், கம்பன் இல்லம் மூன்றாம் இடத்தையும் முறையே தட்டிக் கொண்டன.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு கொத்தணி அதிபர் திரு. சிவபாலன் பரிசில்களை வழங்கினார். (ச-94)

## அந்தியேட்டி அறிவித்தலும் நன்றி நவிலலும்



### திருமதி விஜயகமூர்த்தி மீனாட்சியம்மா

**தோற்றம்:** 20 - 02 - 1910    **மறைவு:** 18 - 04 - 1989

அமரத்துவம் அடைந்த எமது தாயார் திருமதி விஜயகமூர்த்தி மீனாட்சியம்மா (அழகன் அப்பாச்சி) அவர்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம் மேலும் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மற்றும் ஏனைய வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அத்துடன் 18 5 - 1989 வியாழக்கிழமை காலை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

ஆ. சுதலிங்சம்,
கு. நகுலாம்பிகை (ஆசிரியை)
வி. பாலாம்பிகை
(வேலணை மேற்கு மருத்துவமாது)
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

உடையாளர் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

[488]


கனடா

இம்மாதம் 23ஆந் திகதி பிரயாணம் 19-05-89க்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

இத்தாலி

10 பேர் உடனடியாகப் பிரயாணம் மேற்கொள்ள விசா எம்மிடத்தில் உண்டு. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தாய்வான்

தொழிற்சாலைக்கு தொழிலாளர் தேவை.
சம்பளம் — 250 U. S D.

இவை எல்லவற்றிற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

V. T. R. TRAVELS
41, 3rd Cross Street,
JAFFNA.

[482]


உ
சிவமயம்

## 2 ஆம் வருட கண்ணீர் அஞ்சலி

குடும்பத்தில் உதயம்
02 - 02 - 1961

வாழ்வில் அஸ்தமனம்
08 - 06 - 1987



### சிவசாமிக்குருக்கள் இரவிச்சந்திரன்

எங்கள் குடும்பத்தில் உதித்திட்ட சந்திரா உன் வளர்த்தியோடு எங்கள் குடும்ப முன்னேற்றமும் வளர் பிறையாய் வளர்ந்திட்ட இவ்வேளையில் ஐந்து சகோதரமும் ஒன்றாக நின்று உல்லாசவானிலே பாசப்பறவைகளாய் உற்சாமாய்ப் பறந்தோமே.

இந் நாளல்ல எந்நாளும் உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உன் நினைவில் சுழலும்; தாய்,
சகோதரர்கள் - பாமா, தேவி, பாஸ்கரன், கிருபா,
மருமகன் - பாபு.

தையிட்டி,
காங்கேசன்துறை.

(10924)


ANCHOR Bicycle



GUARANTEED

STOCKISTS:
VENKADESWARA STORES
97, KASTURIAR ROAD,
JAFFNA.

SRI PARTHASARATHY STORES
79, KASTURIAR ROAD,
JAFFNA.

High Standard of Quality
Perform Better, Last Longer.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

# கிராம சேவையாளர் பிரிவுகளை அதிகரிக்கும் வேலைகள் துரிதம்

யாழ்ப்பாணம், மே 17

யாழ். மாவட்டத்தில் கிராம சேவையாளர் பிரிவுகளை அதிகரிக்கும் வேலைகள் உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

ஜனசக்தி திட்டத்தின் கீழ் 250 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவையாளர் என்ற அடிப்படையில் கிராம சேவையாளர் பிரிவுகள் அதிகரிக்கப்பட இருக்கின்றன.

புதிய கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்படுவது சம்பந்தமாக உதவி அரசாங்க அதிபர்கள் அவ்வூர் சமூக ஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை நடத்தி வருகிறார்கள்.

பெரும்பாலும் அடுத்த மாத ஆரம்பத்தில் புதிய கிராம சேவையாளர் பிரிவுகள் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அதிபர் பரீட்சை

கடந்த 13ஆம், 14ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெற்ற அதிபர்களுக்கான பரீட்சைகளில் மூன்றும் தரப் பரீட்சையில் 101 பேரும் முதலாம் இரண்டாம்தரப் பரீட்சைகளில் 190 பேருமாக 291 ஆசிரியர்கள் கலந்துகொண்டார்கள்,

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கே வவுனியாவில் அதிபர் பரீட்சைகள் நடைபெற்றன. (க-164)

## தாம் ஜனாதிபதியான விதம் குறித்துப் பிரேமதாஸ!

கொழும்பு, மே 17

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் தாம் நிறுத்தப்பட்டதன் காரணத்தை திரு. ஆர். பிரேமதாஸ கடந்த சனிக்கிழமை வெளியிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் திரு. பிரேமதாஸ பேசும்போது அது குறித்து அவர் சொன்னதாவது:-

சிலர் முன்னர் என்னைச் சிறு குழந்தையாகவே கருதினர்.

ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க. தோல்வியடையும் என்ற எண்ணத்தில் தான் ஜனாதிபதி வேட்பாளராக என்னை நியமித்தனர்.

வெற்றி உறுதி என்று அவர்கள் கருதியிருந்தால் நான் வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கமாட்டேன். அதற்கு கியூ இருந்திருக்கும்.

ஒவ்வொரு அமைச்சரின், எம். பி.யின் அசைவையும் நான் அவதானித்துக்கொண்டிருக்கின்றேன்.

நான் அனைத்தையும் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருக்கின்றேன் என்று ஜனாதிபதி பிரேமதாஸா சொன்னார். (ஒ-எ)

## முதற்பணி

மட்டக்களப்பு, மே 17

மட்டக்களப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் கடமையேற்றவுடன் மேற்கொண்ட முதலாவது பணி கலைப்பட்டதாரிகள் ஆசிரியர் நியமனமாகும். [க-21]

## மாடிக்கட்டடம் அமைக்கத் திட்டம்

வவுனியா, மே 17

பூவரசங்குளம் மகா வித்தியாலயத்தில் புதிய மாடிக் கட்டடம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கென நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென வழங்கப்பட்டுள்ள 25 லட்ச ரூபாவிலிருந்து 7 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் வன்னித் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராஜகுகனேஸ்வரன் தெரிவித்தார். (க-164)

## காரியாலயம் இடம்மாற்றம்

அரியாலை, மே 17

பனை அபிவிருத்திச்சபையின் தலைமைக் காரியாலயம் தற்போது முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள 154ஆம் இலக்கக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. (க-13)

## தடுப்பூசி இலவசம்

வல்வெட்டித்துறை, மே 17

வடமராட்சியில் சில இடங்களில் கோமாரி தடுப்பூசி போடுவதற்கு கால்நடை ஒன்றிற்கு ஒரு ரூபா வீதம் அறவிடப்படுகின்றது என அறிய வருகின்றது. கோமாரி தடுப்பூசி இலவசமானது என புலோலி கால்நடை வைத்திய அதிகாரி தெரிவிக்கின்றார். (க-160)

## மதகு தகர்ப்பு

கொழும்பு, மே 17

மாத்தளைப் பகுதியில் ஹங்கம்புர என்னும் இடத்தில் மதகு ஒன்று கடந்த சனிக்கிழமை நிலக்கண்ணி வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது.

இம்மதகு பூஜாப்பிட்டியாவையும் ஹங்கும்புரவையும் இணைத்திருந்தது. [ஒ-எ]

## புதிய ஆணையாளர் பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம், மே 17

யாழ். மாநகர சபையின் புதிய ஆணையாளராக திரு. பொ. பாலசிங்கம் தமது கடமையை திங்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஒ-13)

## உலக வங்கி நிபந்தனை

கொழும்பு, மே 17

இலங்கைக்குத் தொடர்ந்து நிதி உதவி வழங்க உலக வங்கி நிபந்தனை விதித்து உள்ளது.

இலங்கையின் தேசிய வருமானத்தில் முக்கிய பங்கு வகிக்கும் தேயிலை உற்பத்தியின் வருமானம் தொடர்ந்தும் கிடைக்கும் என்பது உறுதி செய்யப்பட்டால் மட்டுமே உலக வங்கி நிதி உதவி செய்யும். இல்லையேல் தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி உதவித் திட்டத்தையே மறு பரிசீலனை செய்யப்போவதாக உலக வங்கி இலங்கை அரசின் உயர் மட்டக் குழுவிடம் தெரிவித்துள்ளது.



"டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!

சிங்கர் ஓடியோ ஒலி ஏற்றம்.

இலங்கையில் அதி உயர்வான விற்பனையைக் கொண்டுள்ள சிங்கர் தொலைக்காட்சிகளின் அதே தரச்சிறப்பும், உயர்தொழில்நுட்ப வடிவமைப்பும் கொண்டது.

சிங்கர் ஓடியோ-இன்றைய எலக்ரோனிக்ஸ் யுகத்தினுள் எங்களைக் கொண்டு செல்வதுடன், விரிவான பலரகங்களில் கிடைக்கிறது.

இலங்கையின் நாடளாவிய முன்னணி விற்பனையாளர்கள் அமைப்பின் ஆதரவும், விற்பனைக்குப் பிந்திய சேவையும் உண்டு.



ரூபா. 1990/-ல் இருந்து

சிங்கர் ஓடியோ.

சிறப்பான செயலாற்றல்

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைந்த செல்வு வீட்டுப் போட்டியில் மானிப்பாய்ப் போட்டியாளர் மூவர்

மானிப்பாய், மே. 17

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஆதரவுடன் குறைந்த செலவுடன் வீடமைக்கும் போட்டியில் இவ்வருடம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பதின் மூன்று கிராம சேவையாளர்கள் பிரிவில் மானிப்பாய் கிராம சேவையாளர் பிரிவு ஒன்று மட்டுமே பங்குபற்றியது.

மானிப்பாய் கிராம சேவையாளர் பிரிவிலும் மானிப்பாய் வடக்கு திருமதி இராசம்மா கதிரவேலு, கட்டுடை சுப்பிரமணியம் தங்கவேலு, மானிப்பாய் டச் வீதி திருமதி அழகரத்தினம் இரத்தினம் ஆகிய மூன்று போட்டியாளர்களே இப்போட்டியில் பங்குபற்றினர்.

உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தி குறைந்த செலவில் அமைக்கப்பட்ட இவர்களின் வீடுகளை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டு மதிப்பீடு செய்துள்ளனர்.

(க-90)

## உப தபால் அலுவலகம்

மாங்குளம், மே 17

முத்தையன்கட்டு உப தபாலகம் ஒரு வருடத்திற்குப் பின் மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையை அடுத்து 11 - 3 - 88இல் மூடப்பட்ட இவ் உபதபாலகம் முல்லைத்தீவு தபால் அத்தியட்சகர் திரு. குணரத்தினத்தினால் மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

(ச-94)


# வேலை வாய்ப்பு

1. ஓமான் (Oman)
   1. கூலியாட்கள்
   2. சாரதி
   3. மேசன்
   4. தச்சு வேலையாள்
   5. டாக்டர்
   6. நேர்ஸ்

பாஸ்போட், 6 படம், அனுபவச் சான்றிதழ்களுடன் வரவும்

2. குவைத் (Kuwait)

எயர்போட் போட்டர்

சம்பளம் - 50 K. D

3. யப்பான் (Japan)

நாம் முன்னர் எடுத்த சகல தரப்பினருக்குமான வேலை வெற்றிடங்கள் உண்டு. ஆதலால் நாம் தொடர்ந்தும் எடுத்துக்கொண்டு இருக்கின்றோம்.

4. சவூதி (Saudi)

சகல தரப்பினருக்குமான வேலைவாய்ப்புகள் எம்மிடம் உண்டு. பாஸ்போட், 6 படம் அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**T. V. TRAVELS**
**Brown Road,**
**Kokuvil.**

(2573)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



***

தோற்றம்: 04. 04, 1931

மறைவு: 17. 04, 1989

**செல்வி சு. லீலாவதி**
(ஆசிரியை)

அன்பெனும் கோவில்தனை ஆக்குவித்தாய் அக்கா!
அறிவு எனும் ஞானஒளி ஏற்றுவித்தாய் அக்கா!
அஞ்ஞான இருள் அகற்றி அரவணைத்தாய் அக்கா!
ஆறுதல் தர உலகில் இனி ஆருளர் அக்கா?

17-05 1989 இன்று வன்னேரிக்குளம் காணிக்கை மாதா ஆலயத்திலும், 18-05-1989 அன்று அமைதிபுரம் வேளாங்கண்ணி ஆலயத்திலும், 19-05 1989 நாச்சிக்குடா புனித அந்தோனியார் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

சகோதரர், சகோதரிகள்.

2 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(492)

# றெக்கிளமேசன் சனசமூக நிலைய மென்பந்துப் போட்டி முடிவுகள்

குருநகர், மே 17

குருநகர்றெக்கிளமேசன்சன சமூக நிலையத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மென்பந்தாட்டப் [கிறிக்கெற்] போட்டியில் இதுவரைநடந்து முடிந்த ஆட்டங்களின் விபரங்கள் இவை.

4 ஆம் திகதி பாரதியை எதிர்த்தாடிய சிவப்புச் சூரியன் வெற்றிவாகை சூடியது.

5 ஆம் திகதி சென்றலேட் அணியுடன் மோதிய யுத்கார்மல் பி அணி வென்றது.

6 ஆம் திகதி சென்ஜேக் அணியுடன் முதல் விளையாடிய பாடும் மீன் வெற்றி பெற்றது.

அடுத்து திருவள்ளுவருடன் மோதிய ஜேம்ஸ் அணி வென்றது.

அதையடுத்து சென் அன்ரனீஸுடன் மோதிய நோநேம் அணி வெற்றி பெற்றது.

இறுதியாக நடைபெற்ற ஆட்டத்தில் கோல்ஸ் அணியை எதிர்த்தாடிய சிவப்புச் சூரியன் அணி வென்றது.

7 ஆம் திகதி முதல் ஆட்டத்தில் யுத்கார்மேல் ஏ அணியை எதிர்த்து விளையாடிய சுண்டிக்குளி அணி வென்றது.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் கொய்யாத்தோட்டம் அணியுடன் மோதிய யுத்கார்மேல் பி அணி வெற்றி பெற்றது.

அதை அடுத்த ஆட்டத்தில் சென்றலேற்றுடன் மோதிய சிவப்புச் சூரியன் வெற்றியைத் தட்டிக் கொண்டது.

இறுதி விளையாட்டில் சிவப்புச் சூரியன் பி யுடன்மோதிய சுண்டிக்குளி அணி வென்றது.

8 ஆம் திகதி முதல் ஆட்டத்தில் சுண்டிக்குளி அணியுடன் மோதிய பாடும் மீன் ஏ அணி வெற்றியைத் தட்டிக் கொண்டது

அடுத்த ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் அணியுடன் விளையாடிய பாடும்மீன் பி அணி வென்றது. [க-51]

## திருவையாறில் விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி, மே 17

திருவையாறு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு போட்டி 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறும்.

பாடசாலை அதிபர் திரு. என். நடராசா தலைமையில் இப் போட்டி நடைபெறும்.

(ச-76)

மக்கள் முகம்

## தெட்சணா மருதமடு அ. த. க. பாடசாலை

மன்னார், மே 17

மன்னார் தெட்சணாமருதமடு அ. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு எஸ். பஸ்தியான் பிள்ளை தலைவர் [அதிபர்], திரு. எஸ். கனகரத்தினம் செயலாளர், திரு. வே. தங்கத்துரை உபசெயலாளர், திரு. வ. சோதிலிங்கம் பொருளாளர்.

நிர்வாக உறுப்பினர்கள்: திரு. சோ. பாலசரஸ்வதி[ஆசிரியை], திரு. ச. சுந்தரமூர்த்தி, திரு. அ. ஜெயசீலன் [ஆசிரியர்], திரு, அ. தில்லைநாதன், திரு. ஐ செல்வநாயகம். [ச]

## சைவ சித்தாந்த கலாசாலை

யாழ்ப்பாணம், மே 17

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தின் சைவசித்தாந்த கலாசாலையின் அதிபராக கலாநிதி வித்துவான் க. ந. வேலனும் கௌரவ அமைப்பாளராக சிந்தாந்த கலாநிதி மகா வித்துவான் க.கணபதிப்பிள்ளையும் கௌரவ பதிவாளராக சித்தாந்த பண்டிதர் நா. கனகரத்தினமும் கடமையாற்றுவார்கள் என அறிவிக்கப்படுகின்றது. (க)

## உருத்திரபுரம் கொத்தணி உடற் ப, போட்டி

கிளிநொச்சி, மே 17

உருத்திரபுரம் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற் பயிற்சிப் போட்டிகள் அண்மையில் புனித பற்றிமா பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆண் பெண் பிரிவுகளில் இந்து மகா வித்தியாலயம் முதல் இடத்தைப் பெற்றது.

17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் இந்து மகா வித்தியாலயமும், பெண்கள் பிரிவில் புனித பற்றிமா பாடசாலையும் முதலாம் இடத்தைப் பெற்றன.

உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. பொன் சபாபதி தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் கிளிநொச்சி பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. கே. கே. சோமசுந்தரம் கலந்து கொண்டார்.

(ச-76)

## இந்து வித்தியாலய இல்ல வி. போட்டி

முல்லைத்தீவு மே 17

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு இந்து வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் திரு முருகதாசன் தலைமையில் நடைபெற்றது. இளங்கோ இல்லம் முதலாமிடத்தையும், கம்பன், வள்ளுவர் இல்லங்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடத்தையும் பெற்றன.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முல்லைத்தீவு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். எஸ். மனோகரன் பரிசில்களை வழங்கினார். கொத்தணி அதிபர் திரு. வே சுப்பிரமணியம் (முல்லைமணி) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார் ]க92]

## வீடமைப்புக் கடன்

வேலணை, மே 17

அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 11 கி. சே. அலுவலர் பிரிவுகளிலும் 10 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஐந்து கிராம சேவை அலுவலர் பிரிவில் 25 பேருக்கு வீடமைப்புக் கடன்கள் நேரடியாகவும், மற்றைய கிராம சேவை அலுவலர் பிரிவில் 12 பேருக்கு ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமும் வீடமைப்புக் கடன்கள் வழங்கவும் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு ருவதாக இப்பகுதிக்கான வீடமைப்பு உத்தியோகத்தர் திரு. வி. சிவஞானசேகரம் தெரிவித்துள்ளார். (க-167)

## யாழ் மாவட்ட மினி சினிமா சங்கம்
## முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்ட மினிசினிமா உரிமையாளர்கள் அனைவரும் எதிர்வரும் 18 - 5 - 89 வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு அதிமுக்கிய விடயம் சம்பந்தமாக காரியாலயத்தில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

தலைவர்

யாழ். மாவட்ட மினி சினிமா சங்கம். ((10940)


# THURKKAA GOLDEN BEACH INN

42, SAGARA ROAD, BAMBALAPITIYA.
**COLOMBO - 4**

# துர்க்கா கோல்டன் பீச் இன்

(விநாயகர் கோயில் எதிரில் - கடல் பக்கம்)

★ லாட்ஜ் ★

42, சாகர ரோட், பம்பலப்பிட்டி, கொழும்பு - 4

சகல வசதிகளுடன் உங்களை வரவேற்று - தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்கின்றோம்.

தங்குமிடம், உணவு வசதி, போக்குவரத்து வசதிகள், வெளிநாட்டு, உள்நாட்டு தொலைபேசி வசதிகள், நியாயமான செலவுடன் செய்து தருகின்றோம். ஒருமுறை விஜயம் செய்து உண்மையை அறியுங்கள்.

தொலைபேசி: 580846

மேல் விபரங்களுக்கு:

துர்க்கா ஹோட்டல்,
49, யூனியன் பிளேஸ்,
கொழும்பு [...]

(சி/2575)



## தேவை

சிறுகைத்தொழிற்சாலைக்கு உடனடியாகப் பெண் பிள்ளைகள் தேவை. தாவடி, கொக்குவில், இணுவில், கோண்டாவில், சுதுமலையில் குடியிருப்பவர்கள் விரும்பத்தக்கது. அனைவரும் 1[...] 5- 89 காலை- மாலைவரையில் நேரில் வரவும்.

தொடர்பு:
செ. அன்னலிங்கம்,
தாவடிப் பிள்ளையார் கோயிலடி,
தாவடி மானிப்பாய் றோட்,
தாவடி. (606)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. தம்பையா சதாசிவம்**

மண்ணுலகம்: 14. 03. 1916
விண்ணுலகம்: 21. 05 1986

திதி: 17-05-1989

அன்புத் தெய்வமே! பாசத்தின் பிறப்பிடமே! அறிவுச் சுடர் விளக்கே! அன்போடும் பண்போடும் எம்மை ஆதரித்த தெய்வமே!

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து மூன்றாண்டுகள் ஆனாலும் ஆறவில்லை துயர் இன்றும். உங்கள் நினைவு என்றென்றும் எம்மை விட்டு நீங்காது.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

41 - A, சிவப்பிரகாசம் றோட்,
நாச்சிமார் கோயிலடி.
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(609)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி



**சூசைமுத்து யேசுராசா**
(யேசு)

மண்ணில் பிறப்பு: 14 - 03 - 1962
விண்ணில் பிறப்பு: 15 - 04 - 1989

அன்பு மகனே! ஆசைச் சகோதரமே! உன்னை நினைக்கும் போதெல்லாம் உச்சி வெடித்து உடல் கருகுதையா! குடும்பத்திற்கு ஓர் தலைவனாகவும் எமக்கெல்லாம் ஓர் வழிகாட்டியாகவும் இருந்த நீ - எங்கள் எல்லோரையும் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டுப் போய் விட்டாயே மகனே! யேசு - பூவாய் உதிர்ந்தாலும் பொறுத்திருப்போம். பிஞ்சாகிக் காயாகிக் கனியும் பருவத்தில் கவர்ந்தானே காலன்! எம் உயிர் இருக்கும் வரை உன் நினைவிருக்கும். உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உன் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, தம்பிமார்கள், அக்கா,
அத்தான், மருமகன், உற்றார் உறவினர்கள்,
நண்பர்கள்.

பல்கலைக்கழக ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (607)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
உடைசெல்வம் ஊண்ஒளி கல்வி என்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்:

**பொருள்:**
சூதாடுதலை ஒருவன் மேற்கொண்டால், புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும் அவனைச் சேராமல் ஒதுங்கும்.

உதயன்
இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
17 - 05 - 1989 த. பெ. இல: 88

# வீதிகளில் விதி நிர்ணயம்

ஐந்து பேர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள், பாதையிலிருந்து எத்துண்டு கடலில் வீழ்ந்ததாக ஒரு செய்தி. அவ்வாறு விபத்துக்குள்ளான வாசனத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பயணம் செய்தார்கள் என்றும் தகவல்.

மோட்டார் சைக்கிள் ஒருவர் பயணம் செய்வதற்கான வாகனம். அவசர தேவைக்கு மட்டும் மற்றும் ஒருவரையும் அதில் ஏற்றிப் பயணம் செய்யலாம். ஆனால் எங்கள் பகுதிகளில் ஓர் ஆள் வாகனங்களான மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், சைக்கிள் ஆகியவற்றில் ஒரு குடும்பமே பயணம் செய்வதை சாதாரணமாகக் காண முடிகிறது.

பொருளாதாரக் காரணங்களைக் கருதியே இவ்வாறு வாகனங்களில் மேலதிக பயணிகள் சேர்க்கப்படுகின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவசர தேவையின் நிமித்தமும் சிலர் அவ்வாறு செய்வது உண்டு. என்ன காரணமாயினும், தேவையாயினும், மேலதிக பயணிகளை எந்த வாகனத்தில் ஏற்றினாலும் அது போக்குவரத்துக்கு ஆபத்தானது என்பதை மக்களில் பலரும் உணருவதாக இல்லை. போக்குவரத்து ஆபத்து என்பது உயிராபத்து நிறைந்ததும் ஆகும்.

அதனாலேயே வாகனங்களில், குறிப்பிட்ட எண்ணிக்கையான பயணிகளுக்கு மேலதிகமாக ஏற்றிப் பயணம் செய்யக்கூடாது என்ற போக்குவரத்துச் சட்ட விதியே உருவாக்கப்பட்டது.

மக்களுக்காக, அவர்களின் நலன் கருதியே சட்டங்கள் இயற்றப்படுவது மரபு. சில சந்தர்ப்பங்களில், பெரும்பான்மை வாக்குப்பலத்தின் உதவியுடன், மக்கள் நலனுக்கு விரோதமான சட்டங்கள் இயற்றப்படுவதும் இப்போது வழக்கமாகிவிட்டது. எனினும் போக்குவரத்துச் சட்டவிதிகள் முதலாவது ரகத்தைச் சேர்ந்தவை.

போக்குவரத்து ஒழுங்குகள், பிரயாணங்கள், வீதி விதிகள், வாகனம் செலுத்துவதற்கான அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்கள் ஆகிய எல்லாமே பயணிகள், பாதசாரிகள் நன்மை கருதி எழுந்தவை தான். மொத்தத்தில் வீதி விதிகள் மனிதனின் விதியிலும் பங்கு வகிக்க வல்லவை. ஒருவகையில் சில சந்தர்ப்பங்களில் விதியை நிர்ணயிக்கவும் செய்கின்றன எனலாம்.

வீதி விதிகளை அமுல் செய்வதற்கு, வாகனம் செலுத்துநர்களைக் கண்காணிப்பதற்கு, சீரான சிவில் நிர்வாகம் இல்லை என்பதைப் பயன்படுத்தி அவற்றை மீறுவது தற்கொலைக்கு ஒப்பானதாகும். வாகனச் சாரதிகளும், பாதசாரிகளும் பயணிகளும் இதனை மனதில் இருத்திக் கொள்ளுதல் அவசியம்.

வாகனம் செலுத்துநர்கள் இது விடயத்தில் விசேட கவனம் கொள்ளுதல் அவசியம். ஏனெனில் அவர்கள் போக்குவரத்து விதிகள், ஒழுங்குகளை மீறும்போது, தாங்கள் தற்கொலைகளை நாடுவதோடு மட்டுமன்றி, பயணிகளின், பாதசாரிகளின் கொலைகளுக்கும் வித்திடுகிறார்கள்.

போக்குவரத்து ஒழுங்குகளை, விதிகளை மீறுவது என்பது மனித உயிர்களோடு விளையாடுவதாகும். ஆனால் இதனைச் சிறிதேனும் புரியாதவர்களாக, உணராதவர்களாக, சனசந்தடி மிகுந்த நகர்ப்பகுதிகளில் கூட வாகனம் செலுத்துநர்கள் மட்டுமன்றி, பயணிகள், பாதசாரிகளும் போக்குவரத்து விதிகளை மீறுவதை மிகத் தாராளமாகக் காணமுடிகிறது.

பொலீஸார் வந்து தான் சட்ட மீறல்களைத் தடுக்கலாம், நிறுத்தலாம் என்பதில்லை. சாரதிகள், பாதசாரிகள், பயணிகள் ஆகியவர்கள் சரியான நிலையை உணர்ந்து, தாமே போக்குவரத்து விதிகளைச் சரிவர அனுஷ்டித்தால், அதற்கு ஒத்துழைப்பு நல்கினால் வேண்டாத விபத்துகளையும், உயிர்ப்பலிகளையும் தவிர்த்துக் கொள்ளலாம். இது விடயத்தில் சகல தரப்பாரின் கூட்டு முயற்சியும் ஒத்துழைப்பும் மிகமிக அவசியம்.

## ரெலோ அறிக்கை

யாழ்ப்பாணம், மே 17
ரெலோ இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி தனிநபர் கொலை, கொள்ளை, மிரட்டிப் பணம் வாங்குதல் போன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான தண்டனை விதிக்கப்படும்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் வை.சி. செந்தோழன் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது பெயரைக் கூறிக் கொண்டு இதே போன்ற செயல்கள் நடந்தால் கோண்டாவிலில் உள்ள எமது இயக்க முகாமுக்கு அறிவிக்குமாறும் யாழ். மாவட்ட பொறுப்பாளர் வை.சி. செந்தோழன் பொதுமக்களை அறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

### ஆஸ்பத்திரியில்

கொடிகாமத்தில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பஸ்ஸின் சாரதியும், நடத்துனரும் வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் வந்து அங்கிருந்து வல்வெட்டித்துறை வந்து சேர்ந்துள்ளனர்.

எஸ். பாலசுப்பிரமணியம் (வயது 34 - சாரதி) எஸ். சுந்தரலிங்கம் [வயது 54 - நடத்துநர்] ஆகியோரே அந்த இருவருமாவர். [ஒ-160]

### 60 ஆயிரம் கோடி ரூபா

புதுடில்லி, மே 16
உலக வங்கிக்கு இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை இந்தியா செலுத்த வேண்டிய கடன் தொகை இலங்கைப் பணத்தில் 60 ஆயிரம் கோடி ரூபா ஆகும்.

அதே சமயம் சர்வதேச நாணயசபைக்கும் இந்தியா சுமார் 60 ஆயிரம் கோடி (இலங்கைப்பணத்தில்) ரூபா செலுத்த வேண்டியுள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (எ)

✶ இரு தலைவர்களும் ஒரு நிமிடம் கைகுலுக்கல்

# சோவியத் சிந்தனையில் புதிய மாற்றம்
# 84 வயது சீனத் தலைவர் டெங் பாராட்டு!

பீகிங், மே 16
சோவியத் யூனியனுக்கும் சீனவுக்கும் இடையே கடந்த முப்பது ஆண்டுகளாக நிலவி வந்த ராஜதந்திர மோதல் சம்பிரதாய பூர்வமாக நேற்று முடிவுக்கு வந்தது.

சீன மக்கள் மகாமண்டபத்தில் 56 வயதான சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவும், 84 வயதான சீனத் தலைவர் டெங் - ஷியா - பெங்கும் ஒரு நிமிடம் கைகுலுக்கினர். அத்துடன் 30 ஆண்டு கால இராஜதந்திர மோதல் சம்பிரதாயபூர்வமாக முடிவுக்கு வந்தது.

இக் காட்சியை சீன டெலிவிஷன் நேரடியாக ஒளிபரப்பியது.

அப்போது சீனத் தலைவர் டெங் பேசினார்.

அவர் சொன்னார்: மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வரை சோவியத் யூனியனின் அரசியல் சிந்தனையில் புதிய மாற்றம் ஏற்படவில்லை—

கோர்பச்சேவ் தலைமைக்கு வந்த பின்னர்தான் புதிய சிந்தனை மாற்றம் ஏற்பட்டுள்ளது— என்றார்.

பதிலளித்த திரு. கோர்பச்சேவ், 'சோவியத் யூனியன் இப்போது புதிய சர்வதேச கோட்பாடு ஒன்றைக் கடைப்பிடித்து வருகிறது' என்று சொன்னார்.

### ஆர்ப்பாட்டம்

இரண்டு தலைவர்களும் பகைமையை மறந்து உரையாடிக் கொண்டிருந்த சமயம், மக்கள் மகாமண்டபத்திற்கு வெளியே மாணவர்களும் ஆசிரியர்களும் அரசியல் சீர்திருத்தம் கோரி ஆர்ப்பாட்டம் நடத்திக்கொண்டிருந்தனர்.

50 ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்தனர். உண்ணாவிரதத்தில் சோர்வடைந்த மாணவரை அம்புலன்ஸ்கள் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சோவியத் தலைவர் கோர்பச்சேவை ஜனநாயக சீர்திருத்தவாதி என்று வர்ணித்து கோஷம் எழுப்பினர்.

இரண்டு தலைவர்களின் பேச்சுக்கள் பற்றி பீகிங் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் விவரம் தெரிவித்தார்.

### பேச்சுக்கள்

பேச்சுக்கள், ஒதுக்கப்பட்ட 2மணித்தியாலத்திலும் பார்க்க 20 நிமிடங்கள் கூடுதலாக நீடித்தன.

சீன மாணவர் ஆர்ப்பாட்டம் மற்றும் உச்சிமாநாட்டு நிகழ்ச்சி நிரல் மாற்றம், உச்சி மாநாட்டின் பின்னர் 84 வயதான சீனத் தலைவர் டெங் பதவி விலகுவார் என்ற ஊகம் ஆகியன பற்றி எல்லாம் பேச்சுக்களில் இடம்பெறவில்லை.

இரண்டு தலைவர்களும் கம்போடியப் பிரச்சினை குறித்து ஆழமாக பரிசீலனை செய்தனர். ஆனால் கம்போடியப் பிரச்சினை குறித்து பூரண உடன்பாடு காண இரண்டு தலைவர்களும் தவறிவிட்டனர்.

பேச்சுக்களின் ஒரு கட்டத்தில் 'நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்' என்ற அணுகுமுறையைக் கடைப்பிடிப்போம் என்று இரு தலைவர்களும் கூறிக் கொண்டனர்.

பழைய பாதையில் சென்று சோஷலிசத்தை அடைய முடியாது. அப்படிப் போவது தோல்வியிலேயே முடியும் என்று இரு தலைவர்களும் கூறினர்.

இப்படி சீன வெளியுறவுப் பேச்சாளர் சொன்னார். (எ)

# ஐ. நா. பாதுகாப்புச் சபை; இலங்கையும் போட்டி!

நியூயோர்க், மே 16
ஐ.நா. பாதுகாப்புச் சபையில் காலியாக வரும் ஆசிய நாடுகளுக்கான இடத்துக்கு போட்டியிடப் போவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இந்த முடிவை ஐ.நா.வுக்கு இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி திரு. தயாபெரே கடிதம் மூலம் அறிவித்துவிட்டார்.

இந்தக் காலி இடத்துக்கு போட்டியிடப் போவதாக இந்திய அரசு முன்னரே அறிவித்து விட்டது.

இதற்கான தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறும். வெற்றி பெற்ற நாடு 1991 ஆம் ஆண்டில் இருந்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும். (எ)

## ஆப்கனுக்குள் ஊருவும் எண்ணம் இல்லை என பாக். அறிவிப்பு!

இஸ்லமாபாத், மே 16
ஆப்கனுக்குள் பாகிஸ்தான் அரசு தனது துருப்புக்களை அனுப்பப்போவதாக சோவியத் யூனியன் தெரிவித்த குற்றச்சாட்டை பெனாஸிர் அரசு நிராகரித்து விட்டது.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில், ஆப்கனினுள் பாகிஸ்தான் துருப்புக்கள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கன் அரசுடன் நேரடி மோதலில் ஈடுபடும் எண்ணம் பாகிஸ்தான் அரசுக்கு இல்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (எ)

## எனக்கு இருப்பது பற்றுநோய்; புற்றுநோய் அல்ல! 'தினச்சுடர்' விழாவில் கலைஞர் பதிலடி

பெங்களூர், மே. 16
எனக்கு புற்று நோயா? எனக்கு இருப்பது 'பற்று நோய்'; புற்றுநோய் அல்ல!

இப்படிச் சொன்னார் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி;

பெங்களூரில் 'தினச்சுடர்' நாளிதழின் வெள்ளி விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கலைஞர் சொன்னதாவது;

### புற்றுநோய்

தமிழ் நாட்டில் சில வாரப் பத்திரிகைகள் எனக்குப் புற்று நோய் பிடித்துள்ளது என்று எழுதுகிறார்கள்.

அதற்குச் சாட்சியாக ஏதாவது ஒரு மருத்துவ மனையின் படத்தைப் போட்டுக் கொள்கிறார்கள்.

எனக்கு இருப்பது 'பற்று நோய்'

தமிழ் மீது தமிழர்கள் மீது, தமிழ் இனத்தின் மீது பற்று நோய் இருக்கிறது.

''ப'' என்ற எழுத்தை அந்த பத்திரிகையின் அச்சுக் கோர்ப்பவர்கள் 'பு' என்று தவறுதலாக போட்டுள்ளனர். அவர்கள் எழுத்துப் பிழையைத் திருத்திக்கொள்ளட்டும்.

### தஞ்சாவூர் பொம்மை

கர்நாடகத்தில் முதலமைச்சராக இருந்த திரு. பொம்மையின் அரசைக் கவிழ்த்து விட்டோம் என்று சில பேர் சொல்கின்றனர்.

தஞ்சாவூர் பொம்மைபற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

என்ன தான் கவிழ்ந்தாலும் என்னதான் உருட்டி, உருட்டி ஆட்டி விட்டாலும் கொஞ்ச நேரம் அது கவிழ்வது போல் தெரியும், உருள்வது போல் தெரியும்இரண்டு நிமிடங்களுக்குப்பிறகு பார்த்தால் நிமிர்ந்து நிற்கும்.

### கர்நாடக பொம்மை

அதுபோன்ற தஞ்சாவூர் பொம்மை தான் நம்முடைய கர்நாடக பொம்மை என்பதை நான் நன்றாக அறிவேன்.

நான் பத்திரிகையாளர் செங்கோலை இழந்தாலும் இழப்பேனே தவிர எழுதுகோலை இழக்க மாட்டேன். ஓய்வறியாத பணிகளுக்கு இடையே எனக்கு உற்சாகத்தை அளித்துக் கொண்டிருப்பது எழுத்துத்துறைதான். இப்படி கலைஞர் குறிப்பிட்டார். (எ)

## மீண்டும் 'அக்னி' பரீட்சை

புதுடில்லி, மே 16
இந்தியாவின் நடுத்தர ஏவுகணையான 'அக்னி'யின் பரீட்சார்த்த பரிசோதனை இம்மாதம் 21 ஆம் திகதிக்கும் 24 ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரிசோதனை தொழில்நுட்பத் தகராறு காரணமாக இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டது தெரிந்ததே.

## பனாமாநெருக்கடி தீவிரமடைகிறது

வாஷிங்டன், மே 16
பனாமாவுக்கான அமெரிக்கத் தூதர் தாயகம்திரும்பினார்.

பனாமாவில் சட்டபூர்வமான அரசு ஒன்று அமைக்கப் பட்ட பின்னரே தான் பனாமா திரும்புவார் என்று அவர் வாஷிங்டனில் தெரிவித்தார் [எ]

## நிராகரிப்பு

ருனிஸ், மே 16
கைப்பற்றப்பட்ட காஸா மற்றும் மேற்குக் கரைப் பிரதேசங்களில் தேர்தல் நடத்தும் இஸ்ரவேல் அரசின் யோசனையை பலஸ்தீன விடுதலை இயக்கம் நிராகரித்து விட்டது. [எ]

யாழ். இந்துக் கல்லூரியின்

# இந்து இளைஞர் கழகம் நடத்தும் திருமுறை மாநாடு

## 22ஆம் திகதிமுதல்25ஆம் திகதிவரை

யாழ்ப்பாணம், மே 17
யாழ் இந்துக்கல்லூரி இந்து இளைஞர் கழகம் நடத்தும் திருமுறை மாநாடு இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இம்மாதம் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

22 ஆம் திகதி திங்கள் காலை எட்டு மணிக்கு யாழ் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இருந்து திருமுறைச் சுவடிகள் ஊர்வலமாக திருமுறைப் பண்ணிசையுடன் விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டதும் விழா ஆரம்பமாகும்.

ஸ்ரீ ஞான வைரவப் பெருமானுக்கு விசேஷ பூசையும், வழிபாடும் இடம்பெற்றபின் இந்து சாதனம் பத்திராதிபர் திரு. நம. சிவப்பிரகாசம் நந்திக் கொடியை ஏற்றிவைப்பார்.

செல்வன் இ. குகானந்தன் கொடிக்கவி பாடல்பாடுவார்.

யாழ்.கோட்டக்கல்வி நிலைய கல்வி அதிகாரி திரு.சி. தியாகராசா மங்கள விளக்கேற்றி வைப்பார்.

கல்லூரி மாணவர்களின் பஞ்சபுராணம் ஓதுதல் இடம்பெற்றபின் கல்லூரி அதிபர் திரு. ச. பொன்னம்பலம் தலைமையுரை நிகழ்த்துவார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

யாழ் இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். நாகராசா வாழ்த்துரை வழங்குவார். யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. [illegible] ரன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

அடுத்து திருமுறைத் தொகுப்பு நூல் வெளியீடு இடம்பெறும். 'உதயன்' 'ஷப்ரு' நிறுவன நிர்வாகஇயக்குநர் திரு. ஈ. சரவணபவன் நூலை வெளியிட்டு வைப்பார். யாழ் இந்து முன்னை நாள் அதிபர் திரு. ந. சபாரத்தினம் முதல் பிரதி பெறுவார்.

'ஆலயமணி' ஆசிரியர் புலவர் ஈழத்துச் சிவானந்தன், துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், கல்லூரி உயர்தரவகுப்பு மாணவன் செல்வன் பா. அகிலன் ஆகியோரின் சொற்பொழிவுகளும், யாழ் இந்து மகளிர் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி மாணவ, மாணவிகளின் பண்ணிசையும் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு வண்ணை திரு. சே. சிவராஜா (ஆசிரியர்) தலைமை வகிப்பார்.

யாழ் இந்துக் கல்லூரி உப அதிபர் திரு. பொன். மகேந்திரன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்க யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பஞ்சபுராணம் ஓதுவார்கள்.

ஆசியுரை, வாழ்த்துரை, வரவேற்புரைகளை முறையே கல்வி அதிகாரி திரு எஸ். சிவவிநாயகமூர்த்தி, வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. சிவ. சரவணபவன், யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. ஆர். இராஜகோபால் ஆகியோர் வழங்குவார்கள்.

யாழ் இந்துக்கல்லூரி மாணவர்களால் 8 ஆம் திருமுறைப் பண்ணிசையும் பாடப்படும்

இளைப்பாறிய அதிபர் வித்துவான் இரா. திருநாவுக்கரசு, மில்க்வைற் செய்தி ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம், செல்வன் பா. சேதீஸ்வரன் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

3 ஆம் நாள் நிகழ்ச்சிக்கு ஆசிரியர் திரு. ஆ. மகாதேவன் தலைமை வகிப்பார்.

யாழ் இந்துக் கல்லூரி உப அதிபர் திரு. நா. சோமசுந்தரம் மங்கள விளக்கேற்றி வைக்க கல்லூரி மாணவர்கள் பஞ்சபுராணம் ஓதுவார்கள்.

இளைப்பாறிய யாழ் இந்து உப அதிபர் திரு. செ. முத்துக்குமாரசுவாமி ஆசியுரையையும் இளைப்பாறிய அதிபர் திரு. இ. சச்சிதானந்தம் வாழ்த்துரையையும் வழங்குவார்கள்.

ஆசிரியர் திரு. தி. கமலநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்

பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு. சோ. பத்மநாதன் யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி, யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. சிவ. மகாலிங்கம் ஆகியோரின் சொற்பொழிவுகளும் கல்லூரி மாணவன் செல்வன் இ. வைத்திலிங்கத்தின் பேச்சும் இடம்பெற உள்ளன.

4 ஆம் நாள் நிகழ்ச்சிக்குப் பழைய மாணவர் சங்கத்தலைவர் திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் தலைமை வகிப்பார்.

மில்க்வைற் அதிபர் சிவ தர்மவள்ளல் திரு. க. கனகராசா மங்கள விளங்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். இளைப்பாறிய சகிதே ஆசிரியர் திரு. கா. மாணிக்கவாசகர் பஞ்சபுராணம் ஓதுவார்கள்.

தலைமை உரையைத் தொல்புரம் பிரம்மஸ்ரீ ஜெ. சுப்பிரமணிய சாஸ்திரிகளின் ஆசியுரையும் வைபவப்புலவர் திரு. மு. திருஞானசம்பந்தப் பிள்ளையின் வாழ்த்துரையும் இடம்பெறும்.

இளைப்பாறிய அதிபர் திரு. கே. ஆர். நடராஜாவின் பண்ணிசைக் கச்சேரியும் சைவப் புலவர் திரு. பொன். தெய்வேந்திரனின் சங்கீத கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

இந்து இளைஞர் கழகத்தலைவர் திரு. சி. க. புண்ணியலிங்கம் நன்றியுரை வழங்குவார். [ச-3]

## அம்புவி தனையாளும் அம்பிகை மணவாளா!

ராகம்: பாகேஸ்வரி தாளம்: ஆதி

**பல்லவி**
நெஞ்சினி லுனையெண்ணி ஐந்தெழுத் தினையோதி
நெற்றியில் நீற்றை யணிந்தேன் - கேதீசா!
— (நெஞ்......)

**அனுபல்லவி**
அம்புலி தனைச்சூடி அம்பலத் தினிலாடி
அம்புவி தனையாளும் அம்பிகை மணவாளா!
— (நெஞ்......)

**சரணம்**
மெய்யதனைத் தொட்டே பொய்யதனை விட்டேன்!
பொய்யதனை விட்டே பெய்யும்வினை சுட்டேன்!!
பெய்யும்வினை சுட்டே உய்யும்நெறி கற்றேன்!
உய்யும்நெறி கற்றே துய்யனுனைப் பெற்றேன்!!
— (நெஞ்......)

— முருகு
(இன்று 17. 05. 89 திருக்கேதீச்சரம் 7ஆம் திருவிழா)

சமய சந்நிதிகளில்

## ஆவரம்பிட்டி முத்துமாரி உற்சவம்

அராலி, மே 17
அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாக உள்ளது.

இம் முறை கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு இருப்பதால் தினமும் காலை 10 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி பகல் 12 மணிக்கு முடிவடையும்.

பொங்கல் வழமை போல் நடைபெறும். (ச-12)

## புங்குடுதீவு புனிதசவேரியார் திருநாள்

புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய வருடாந்த திருநாள் 11ஆம் திகதி கொடியேற்ற வைபவத்தோடுஆரம்பமாகியது. பங்குத்தந்தை அருள்திரு. யே. யேசுதாசன் அடிகளார்கொடியேற்றிவைத்தசர்.

தினமும் மாலையில் நவநாள் வழிபாடுகளும் திருப்பலிப் பூசைகளும் நடைபெற்றுவருகின்றது. நவநாள் மறையுரைகளை அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை, அருள்திரு டோமினிக் ஆகியோர் வழங்குகின்றார்கள். 19ஆம் திகதி மாலையில் வேஸ்பர் ஆராதனையும் நற்கருணைப் பவனியும் நடைபெறும்.

20ஆம் திகதி காலையில் திருநாள் கூட்டுத் திருப்பலிப் பூசையை யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு எஸ். ஏ. மைக்கல்சுவாமி அடிகளார் ஒப்புக்கொடுப்பார். தொடர்ந்து புனித சவேரியாரின் திருச்சுருபப்பவனியும், புனிதரின் ஆசீரும் வழங்கப்படும். [4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதி
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

17 - 05 - 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## வட இலங்கை மருத்துவக் கல்லூரி
## மாணவர் ஒன்றியம்
## மாணவர் பொதுக் கூட்டம்

காலம்:- 18- 05- 1989 வியாழக்கிழமை
காலை 9. 30 மணி
இடம்:- வட இலங்கை மருத்துவக்கல்லூரி,
மூளாய்

-செயற்குழு உறுப்பினர்

(10956)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



● நளினி ராஜபக்ஷ ●
(புனிதமரியாள் வித்தியாலயம், 4ஆம் ஆண்டு மாணவி)

பிறப்பு: 24- 01- 1979
இறப்பு: 17- 04- 1989

எம் நெஞ்சத்தில் நிறைந்து வாழுகின்ருய்
உன் எண்ணத்தை சொல்லி விட்டு மறைந்து விட்டாய்!
வண்ணத்தின் வானவில்லாய் தோன்றிஞய்
நான் வடித்து விட்ட கவிதைகளின் கருவாளுய்!
நளினி என்று அழைத்தவுடன்
நளினத்துடன் ஒடி வருவாய்!
இன்று நீ பிரிந்து 31 ஆவது நாளாகி விட்டது.

துயருறும் உன்
அப்பா, அம்மா, அண்ணு, தம்பி
அம்மம்மா, மாமாமார், சித்தப்பா,
சித்திமார், அம்மப்பா.

கெனடி வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(10951)

## நினைவஞ்சலி



### கிருஷ்ணசாமி இராமச்சந்திரன்
(கில்மன்)

நீ மண்ணை நேசித்தாய்
நீ மரணத்தை மறந்தாய்
அவை இரண்டும் இப்போது தெரிந்தன
இன்றுமட்டும் புரிந்தனர் உன்னை யாரென்று
நீ மண்ணுக்காய் செய்த தியாகம்
சரித்திரம் உள்ள மட்டும் வாழும்
நெஞ்சம் நிறைந்த நினைவுகள் நிலைக்கும்

நண்பர்கள்

மீசாலை.

(10954)

### அமைதிப்.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)
தற்கோ கொழும்புக்குத் தாங்கள் வரவில்லை என்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைதி, ஸ்திரநிலை, சகஜநிலை ஆகியவற்றை மீண்டும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அனைத்தையும் ஆராயும் நோக்கத்துடனேயே தாங்கள் வந்ததாகவும் விடுதலைப்புலிகள் தூதுக்குழுவினர் குறிப்பிட்டனர்.

**பொருளாதார சீர்குலைவு**

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் விவசாயம், மீன்பிடித் தொழில், கைத்தொழில், வர்த்தகம் ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் சீர்குலைந்திருப்பதுகுறித்து நேற்று நடந்த பேச்சுக்களின் போது முக்கியமாக ஆராயப்பட்டது.

அரசாங்கத் தரப்பில் அமைச்சர்களான ஏ. சி. எஸ். ஹமீது ரணில்விக்கிரமசிங்கா, சிறிசேன கூரே, யு. பி. விஜேக்கோன் ஆகியோரும்-

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் திரு. அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரத்தினம் யோகி, திரு. பரமமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று நேற்று மாலையும் இலங்கை அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

### ஜவானின்----.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)
வெடித்ததால் தபால் அதிபர் இறந்தார்.

இதை அடுத்து படையினர் புத்தூர் சந்தியில் இறங்கிக் கொண்டனர். மரணமானவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

காயமடைந்த இருவரில் இளையதம்பி சின்னமாரி [வயது 34] ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிருர்.

இது தொடர்பாக யாழ். பொலீஸ் பிரிவில் பஸ் சாரதி, நடத்துனர் ஆகியோர் முறையிட்டுள்ளனர்.

### ரேகண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தற்கு மக்கள் விடுதலை முன்னணி அவ்வளவு பலவீனமானதல்ல; முட்டாள்தனமுடையதும் அல்ல.

தேவையான வைத்தியவசதிகளைப் பெறுவதற்குரிய திறமையும் பலமும் மக்கள் விடுதலை முன்னணிக்கு உண்டு.

எதிர்காலத்தில் இப்படியான தவருன செய்திகளை நம்ப வேண்டாம் என்று மக்களை ஜே. வி. பி. கோருகிறது — என்று முன்னணியின் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

### கூட்டம்...

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)
யின் செயலாளரும், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆட்சிக் குழு உறுப்பினருமான திரு. ஆர். சி. மன்மதராஜன் ஆவார்.

வட இலங்கை சங்கீத சபையின் கூட்டம் நேற்றுப் பிற்பகல் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, சுமார் இரண்டு மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றது. திரு. மன்மதராஜன் இருதய நோயினல் தாக்குண்டே மரணமானுர்.

திரு மன்மதராஜன் முன்னுள் யாழ்.மாநகரசபை உறுப்பினருமாவார். (அ-3)

### கனகநாயகம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
திகதி சிட்னியில் நடைபெறும்.

முன்னுள் செனட்டரான இவர் யாழ், சட்டத்தரணிகள் சங்கத் தலைவராகவும், சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும், மனேஜராகவும், சேர். பொன். இராமநாதன் நம்பிக்கை நிதியத்தின் தலைவராகவும் பணி புரிந்தவர் ஆவர். மற்றும் பல சமய, சமூக ஸ்தாபனங்களிலும் கடைசிக் காலம்வரை துடிப்புடன் பணியாற்றியவர் ஆவார். (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுந்தரலிங்கம் தேவி

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி சுந்தரலிங்கம் தேவி 11-05-1989 இல் அகால மரணமானுர்.

இவர் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், வசந்தகுமார் (சுவிஸ்), சூரியகுமார் (கனடா), சிவக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்ற திரு. திருமதி செனகரத்தினத்தின் மகளும், காலம்சென்ற திரு. திருமதி தம்பையாவின் மருமகளும், கிளி (சுவிஸ்), ராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரூத் (சுவிஸ்), பிறேம் (கனடா), சங்கரி (கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியும், கதிரவேலு, காலம்சென்ற மகாதேவா, அம்பிகை, பரமேஸ்வரி, நிர்மலாதேவி (சனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னரின் 'கண்ணபுரம்' இல்லத்தில் வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
த. சுந்தரலிங்கம்
(கணவர்)

ஊரெழு கிழக்கு,
சுன்ஞகம்.

[10960]

### திருமதி நல்லம்மா சரவணமுத்து

மேலைக்கோண்டாவில், நெட்டிலைப்பாயைச் சார்ந்த திருமதி நல்லம்மா சரவணமுத்து இயற்கை எய்திவிட்டார். அன்னர் காலஞ்சென்ற திரு. சிவசம்பு சரவணமுத்து (இளைப்பாறிய அதிபர், சைவ மகாஜன மகா வித்தியாலயம், இணுவில்) வின் அனபு மனைவியும், காலஞ்சென்ற இரத்தின மயில்வாகனம் பொன்னம்மா, திருமதி கந்தையா இரத்தினம்மா, திருமதி ஆறுமுகம் சுபத்திரை (சுதுமலை), காலஞ்சென்ற திரு செ. தியாகராசா (இளைப்பாறிய தபாலதிபர்), திரு. செல்லப்பா நடராஜா (Senior Hansard Reporter, Parliament) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. S.S.பாலச்சந்திரன் (Director, Animal Production and Health Department, N/E Province). திருமதி சுந்தரேஸ்வரி கணேசன் (லண்டன்), திருமதி மகேஸ்வரி ஸ்ரீபதி, Dr. S. குகதாசன் (Consultant Eye Surgeon, Teaching Hospital, Jaffna), திரு. சிவனேசன் (Agri Instructor Department of Agrarian Services, Jaffna / Killinochchi), திருமதி ஜெகதீஸ்வரி சிவலோகநாதன் ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி இந்திராணி பாலச்சந்திரன் (ஆசிரியை. சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்), திரு. M. P. கணேசன் (Radio Grapher, London), திரு. க. ஸ்ரீபதி (Retd. Tea Commissioner's Dept. Colombo), திருமதி கலைவாணி குகதாசன், திருமதி நிர்மலாஜினி சிவனேசன், திரு. வி. சிவலோகநாதன் (Arthie Jewellers, Jaffna) ஆகியோரின் அன்பு மாமியும் குமரன், உமையாள், திருமதி கிரிஜா உதயகுமார் (லண்டன்), திருமதி வனஜா தினேஷ்குமார் (கனடா), முருகதாஸ் (லண்டன்), கவிதா, திரிவேணி, சுஜயனி, லிஷாயினி, சஞ்சீவ், வர்ணன், றிஷாங்கி, ஆர்த்தி, றுக்மாங்கன், சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், நிலானி, மாயன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

மரணச் சடங்குகள் கோண்டாவில் கிழக்கிலுள்ள அன்னரது மகனின் இல்லத்தில் இன்று புதன்கிழமை காலை 9-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பிள்ளைகள்

ஞானவைரவர் ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு.

[612]

## 45ம் நாள் அந்தியேட்டிக் கிரியையும் நினைவஞ்சலியும்

● மலர்வு: 1963. 7. 13
உதிர்வு: 1989. 4. 3 ●



### இராசரத்தினம் இராசரஞ்சன்

எங்கள் குடும்பத்தின் திருவுருவாய் அறிவின் சுடராய் அன்பின் பிறப்பிடமாய் வாழ்ந்த அன்புத் தெய்வம் இரஞ்சா எங்களை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்ட செல்வமே உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்ருேம். அன்னரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் 17 - 5 - 89 இன்று வீட்டில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிருேம்.

பெற்ருேர், சகோதரர்கள்.

16, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(10961)

## மரண அறிவித்தல்கள்

### திரு. கி. கோபாலரட்ணம்

(செயலாளர், பொதுநிர்வாக உள்ளூராட்சி வட-கிழக்கு அமைச்சு, திருகோணமலை)

கொக்குவிலைச் சேர்ந்த திரு. கி. கோபாலரட்ணம் 15 - 05 - 89 இல் காலமானுர்.

அன்னர் விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி யசோதா யோகேந்திரா, திருமதி ராதா அருந்தவநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், க யோகேந்திரா (Engineer, Lanka Cement Ltd), ச. அருந்தவநாதன் (Teacher, Vijayaratna Maha Vididiyala, Negombo) ஆகியோரின் அன்பு மாமனுரும், காலம் சென்ற கிருஷ்ணபிள்ளை, பசுபதி ஆகியோரின் அன்பு மகனும், பாலகிருஷ்ணர் (Appeal Court Judge, Colombo), காலம் சென்ற Dr. ராஜகோபால், ரட்ணகோபால் (Engineer, Austrilla), திருமதி சுபத்திரா இராமநாதன் (Teacher, Ramanathan Hindu Ladies College), திருமதி ருக்மணி ஞானேஸ்வரன் (Zimbawa) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் 43, சபாபதி லேன் off காங்கேசன்துறை வீதி, கொக்குவில் வீட்டில் 18-5-89 வியாழக்கிழமை நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் மயானத்திற்குக் காலை 9.30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிருேம்.

தகவல்:
திருமதி விக்னேஸ்வரி கோபாலரட்ணம்.

கொக்குவில்,
43, சபாபதி லேன் off காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(10959)

### முருகுப்பிள்ளை கார்த்திகேசு

பழவத்தை, வியாபாரி மூலை, பருத்தித்துறையில் வசித்தவரும் சங்கானைத் தபால் அதிபருமான முருகுப்பிள்ளை கார்த்திகேசு (16-05-89) செவ்வாய்க்கிழமை அகால மரணமானுர். இவர் வி. க. முருகுப்பிள்ளை, காலம் சென்ற வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், மங்கையற்கரசியின் அன்புக் கணவனும், மதியழகன், மனேகரன், சோதிமதி, இளங்கோ ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மலிங்கம் (சமூக சேவை அலுவலர்), சோமசுந்தரம் (பொறியியலாளர்), குழந்தைநாயகி, பத்மராணி, தனபாக்கியம், சரோஜினிதேவி, வயிரமுத்து திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பையா, இராசையா, இராமச்சந்திரன், தங்கவேலு, தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், அமலனின் பாட்டனுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று 17-5-89 புதன்கிழமை அன்னரின் இல்லத்தில் நடைபெற்று பி. ப. 3. 00 மணிக்கு பூதவுடல் பருத்தித்துறை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல், மு. தர்மலிங்கம்

[10962]

### திரு. R.C. மன்மதராஜன் - J.P

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நீண்டகால அங்கத்தவரும், சமாதான நீதவானும், முன்னுள் யாழ் மாநகரசபை அங்கத்தவரும், தற்போதைய சைவப்பிரகாச அச்சக அதிபருமாகிய திரு. R.C. மன்மதராஜன் அவர்கள் 16- 5- 89 இல் காலமானுர். ஈமக்கிரிகைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ம. இராமநாதன்,
மகன்.

241, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(10963)

### அட்வக்கேற் S.R. கனகநாயகம்

வட்டுக்கோட்டை சங்கரத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் 1 ஆம் குறுக்குத் தெரு 61 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அட்வக்கேற் S.R. கனகநாயகம் அவர்கள் 15. 5. 89 இல் அவுஸ்திரேலியாவில் (No. 12, FITZ WILLIAM ROAD, VAUCLUSE, SYDNEY N. S. W. 2030 என்ற விலாசத்தில்) காலமானுர். இவர் முன்னுள் செனட்டரும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி Hindu Board (முன்னுள்) தலைவரும், மனேச்சரும் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தலைவரும், சேர். பி. இராமநாதன் தர்மகர்த்தா சபைத்தலைவரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும் ஆவார். இவர் சத்தியம்மாவின் அன்புக்கணவரும், சாவித்திரிதேவி விரிவுரையாளர் [சிட்னி], கனக-ஈஸ்வரன் (ஜனதிபதிசட்டத்தரணி), மகேஸ்வரன் (பொறியியலாளர்-சிட்னி) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.A. பாலசுப்பிரமணியம் (சிட்னி) றமணி, சூரியா ஆகியோரின் அன்பு மாமனுரும் பாலகுகன், சக்திகுகன், தேவிகா, கிஷான், ரதிகா, சிவான் ஐங்கரன், மயூரன், அச்சுதன் ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னரின் ஈமச்கிரிகைகள் 18 - 5 - 89 இல் அவுஸ்திரேலியாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கனக - ஈஸ்வரன்.

112/5, BARNES PLACE,
COLOMBO-7.

(615)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் [illegible] உள்ள அச்சகத்தில் 17—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org